Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-14 26-02-2005 சனிக்கிழமை ஓசை -08



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11251)

# இல. தொ. கா. ஆதரவை விலக்கியது;

# அரசாங்கம் பெரும்பான்மை இழந்தது!

## பங்குச் சந்தையில் வீழ்ச்சி



(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விலக்கிக்கொண்டது. இவ் ஆதரவு விலகல் அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. இதனால் அரசு பெரும் பான்மைப் பலத்தை இழந்துள்ளது. இதனையடுத்து நேற்றுப் பங்குச் சந்தையில் வீழ்ச்சி ஏற் பட்டுள்ளது.**

பாராளுமன்றத்தில் 119 இடங்களைப் பெற்றிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்கிய ஆதரவை இ.தொ.கா விலக்கிக்கொண்டதால் அரசாங்கத்திற்கு இப்பொழுது 111 ஆசனங்களே உள்ளது. இதனால் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை அரசாங்கம் இழந்துள்ளது. 225 ஆசனங்களிலுள்ள பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைக்கு 113 ஆசனங்கள் தேவை. அரசாங்கத்தின் உறுதிப்பாடு குறைந்தமையால் பங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இளவரசர் சாள்ஸ் திங்கள் வருகை மட்டக்களப்பிற்கும் செல்வார்

(கொழும்பு)

இங்கிலாந்து இளவரசர் சாள்ஸ் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்கின்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காக இங்கிலாந்து இளவரசர் இந்த விஜயத்தை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து இளவரசரின் இலங்கை விஜயத்தின் போது மட்டக்களப்பிற்கு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் திணைக்களத்தின் பேச்சாளர் ஜெயந்த பத்திரன இந்தத் தகவலை நேற்று வெளியிட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் போராட்டத்தில் இணையவந்த 4 சிறுவர்,சிறுமியர் பெற்றோரிடம் ஒப்படைப்பு



(அலுவலக செய்தியாளர்)

தாமாக முன்வந்து விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட திருமலை வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 18 வயதுதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர் நால்வர் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக வடகிழக்கு மனித உரிமை செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் மக்கள் தொடர்பக பொறுப்பாளர் வின்சலின் மக்கள் தொடர்பக மகளிர் பொறுப்பாளர் சந்திரி ஆகியோரினால் மேற்படி விடுதலைப் போராட்டத்தில் தாமாக முன்வந்து இணைந்து கொண்ட திருமலையைச் சேர்ந்த இரண்டு சிறுவர்களையும், சிறுமியையும் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த சிறுமியையும் அவர்களது

(12ஆம் பக்கம் பார்க்க)

## துணை ராணுவப் படை என்று எதுவும் இல்லை என்கிறார் சந்திரிகா

சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் துணை இராணுவப் படை எதுவும் இல்லை என சனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கா தெரிவித்துள் ளார்.

நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் அவர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்துடன் இயங்கும் ஆயுதக் குழுக்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8 ஆவது சரத்தின் படி நிராயுத பாணிகள் ஆக்கப்பட வேண்டும் என விடுதலைப்புலிகள் சுட்டிக்காட்டியிருப்பது தொடர்பாகவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமி புனரமைப்பு தொடர்பாக கிடைக்கும் நிதியை பங்கீடு செய்வதில் புலிகளுடன் செயற்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்கும் எனவும் அவர் கூறினார்.

இச் சந்திப்பில் நோர்வே தரப்பில் தூதுவர் ஹான்ஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

சுகயீனம் காரணமாக நேற்று போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

கடற்புலி-மேஜர்-தயாநந்தன் (சின்னராசா- தங்கவடிவேல் நெடியகாடு மாணாங்கானை வல்வெட்டித்துறை யாழ்ப்பாணம் த.மு 3ஆம் யூனிற் யோகபுரம் மல்லாவி) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

23-02-2005அன்று சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர் ஏரம்பு (கந்தையா ஏரம்பு - புங்குடுதீவு, முதலாம் வட்டாரம்) என்னும் நாட்டுப்பற்றாளரே

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் திரை நீக்கமும்

09-05-2000அன்று ஓயாத அலை மூன்றில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை ரூபன் (ஜோசப் விதுராநந் ஈச்சமோட்டை விநாயகர் வீதி, யாழ்ப்பாணம், தற்காலிக முகவரி புலிமச்சிநாதகுளம் மாங்குளம்) எனும் மாவீரரின் திருவுருவப்படம் இன்று இவரின் தற்காலிக இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை காலை 09.00 மணிக்கு இவரது இல்லத்தில் இருந்து எடுத்து வரப்பட்டு புலிமச்சிநாதகுளம் அ.த.க. பாடசாலையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். பின்னர் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரை நீக்கம் செய்யப்படும். (08)

## தென்மராட்சி வரணியில் இளைஞர் தாக்கப்பட்டு கடத்தல்

(கொடிகாமம்)

தென்மராட்சி வரணி தில்லையம்பலப்பிள்ளையார் கோயிலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞர் ஒருவர் பலமாக தாக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் ஹைஏஸ் வாகனம் ஒன்றில் கத்தி,கோடாரி, வாள், பொல்லு என்பவற்றுடன் வந்த ஒன்பது பேர் கொண்ட குழுவினர் வீடு ஒன்றினுள் புகுந்து அங்கிருந்தவர்கள் எல்லோரையும் தாக்கி விட்டு சகாதேவன் ரதீபன் (வயது-20) என்பவரை பலமாகத் தாக்கி காயப்படுத்தியதுடன் அவரை வாகனத்தில் பலவந்தமாக ஏற்றிக் கடத்திச் சென்றுள்ளனர்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு சிறுவர் நல உள்ளீடுகள் வழங்கல்


(அலுவலகசெய்தியாளர்)

மட்டக்களப்பில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்ற மக்கள் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாகியுள்ள நிலையில் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இம் முகாம்களிலுள்ள இளம் சிறார்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் கல்குடா, பட்டிருப்பு வலையங்களில் 26 முன்பள்ளி நிலையங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேரடியாகப் பராமரித்து நிர்வகித்து வருகின்றது.

அந்த வகையில் கடந்த 17.02.2005 அன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. மதனராஜ், வாகரைப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி. பிரியா ஆகியோரின் ஏற்பாட்டில் சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சார்ந்த பெவியன்லீலன்ட் என்பவரும் மற்றுமொரு வெளிநாட்டு பிரஜையுமாக முன்பள்ளிக்குச் சென்று சிறார்களைப் பார்வையிட்டனர். (12ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் அஞ்சலி



நாட்டுப்பற்றாளர்

## வே.க.ஏரம்பு

இம்மண்ணையும், மக்களையும் நன்கு நேசித்த எமது ஆசிரியர் பெருந்தகை எம்மையும் அவர்களுடைய குடும்பத்தினர், உற்றார், உறவினர்களையும் விட்டு சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரில் மூழ்கியுள்ளோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

திருமுறிகண்டி ஆலய பரிபாலனசபை,
திருமுறிகண்டி.

(5751)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமாவை முடித்து வெளியேறிய முதலாம், இரண்டாம், மூன்றாம் அணியில் கடல்வள ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கும் மற்றும் ஏனையோருக்குமான அவசர கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணிக்கு யாழ். கல்வி வலயக் கல்வி மேம்பாட்டுப் பேரவையில் இடம் பெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்டோர் தவறாது கலந்துகொள்ளுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## தொழில்நுட்ப நிலையம் திறப்பு


(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் சர்வோதய அமைப்பினால் தகவல் தொழில் நுட்ப நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சர்வோதய அமைப்பினால் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ள 12 தகவல் தொழில்நுட்ப நிலையங்களில் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முதலாவது தகவல் தொழில்நுட்ப நிலையமே வவுனியா சர்வோதய மத்திய நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (10)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 26 07 1987



உதிர்வு 14 02 2005

## செல்வி குணரத்தினம் சுனிதா

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் காலன்
உனை அழைத்தானோ
பெற்றவர்கள் கலங்கிநிற்க சோதரர்கள்
பரிதவித்து நின்று
கண்ணீருடன் உனது பூமுகத்தை தேடுகிறோம்
ஒரு தடவை எம்மருகே வரமாட்டாயா?

ஆத்ம சாந்தி வேண்டி 2005.02.27 ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரிப்பட்டமுறிப்பு
மாங்குளம்.

தகவல்:-
குடும்பத்தார்.

(5750)

# பயணியர் புதிய பேருந்துப்பணி

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள் பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக 01.03.2005ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

### நட்டாங்கண்டல் - முகமாலை

| நட்டாங்கண்டல் | பாலையடி | மல்லாவி | வடகாடு | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டு நகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 01-00 | 01-40 | 02.00 | 02.15 | 02.30 | 03.05-03.15 | 03.35 | 03.55 | 04.20 | 04.25 | 04.45 |

### முகமாலை - நட்டாங்கண்டல்

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | வடகாடு | மல்லாவி | பாலையடி | நட்டாங்கண்டல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை - 08.00 | 08.15 | 08.20 | 08.45 | 09.05 | 09.25-09.45 | 10.20 | 10.35 | 10.50 | 11.10 | 12.00 |

குறிப்பு:-

நட்டாங்கண்டலிலிருந்து பகல் 1.00 தொடங்கி மறுநாள் காலை 8.00 மணிக்கு முகமாலையிலிருந்து புறப்படும்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

# பயணியர் புதிய பேருந்துப்பணி

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள் பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக 01.03.2005ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

### மல்லாவி -மாங்குளம் -முகமாலை


| மல்லாவி | பாலையடி | கொல்லவிளாங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை - 5.15 | 5.40 | 6.00 | 6.25 | 7.00-7.20 | 7.40 | 8.00 | 8.25 | 8.30 | 8.45 |

### முகமாலை -கந்தபுரம் -மல்லாவி

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள் சந்தி | துனுக்காய் | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 1.30 | 1.45 | 1.50 | 2.15 | 2.35 | 3.40 | 3.50 | 5.10 | 5.20 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்.

(சி-11364)



இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் சோல் மொபாஸ் காஸா குடியிருப்பில் 9000 குடும்பங்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறுவதற்கான வேண்டுகோளில் கையெழுத்திடுகின்றார்.

# பிரிட்டன், இந்திய அரசுகள் அளித்துவந்த நேபாளத்திற்கான ராணுவ உதவிகள் நிறுத்தம்!

## தீவிரவாதிகளின் பலம் அதிகரிக்குமென அச்சம்

(காத்மண்டு)

**நேபாளத்துக்கு இராணுவ உதவிகளை நிறுத்த இந்தியா, பிரிட்டன் முடிவெடுத்துள்ளது 'துரதிஷ்டவசமானது' என அந்நாட்டு இராணுவம் கருத்துத் தெரிவித்துள்ளது. இம் முடிவால் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்குத்தான் மறைமுகமாக ஊக்கம் கிடைக்கும் எனவும் நேபாள இராணுவம் கூறியுள்ளது.**

நேபாளத்தில் ஆட்சி அதிகாரத்தை மன்னர் ஞானேந்திரா கைப்பற்றியதையும், அவசர நிலையைப் பிறப்பித்ததையும் கண்டித்து இனி மேல் இராணுவ உதவிகளைச் செய்யப் போவதில்லை என இந்தியாவும் பிரிட்டனும் அறிவித்துள்ளன.

அங்கு சனநாய சுதந்திரம் தேவை என இரு நாடுகளும் வலியுறுத்தியுள்ளன. நேபாளத்துக்கு உலங்கு வானூர்திகள் கண்ணி வெடிகளைக் கண்டறியும் வாகனங்கள், குண்டு துளைக்காத உடைகள், சரக்குப் போக்குவரத்து சாதனங்கள் ஆகியவற்றை இந்தியா ஏற்கனவே வழங்கியுள்ளது. மேலும் நேபாள இராணுவத்திற்கு பயிற்சியையும் அளித்துள்ளது.

எம்-ஐ 17 உலங்கு வானூர்திகள் விமானங்கள், குண்டுகளை செலிழக்கச் செய்யும் சாதனங்கள், உலங்கு வானூர்திகள் ஆகியவற்றை பிரிட்டன் வழங்கியுள்ளது. இந்நிலையில் இந்தியாவின் முடிவு துரதிர்ஷ்டவசமானது என வர்ணித்தார் நேபாள இராணுவ செய்தித் தொடர்பாளர் 'தீபக்' எனினும் தற்போது மாவோயிஸ்ட்டுக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் இம் முடிவுகளால் பாதிக்கப்படாது" என்றார்.

இதேவேளை நேபாளத்துக்கு இராணுவ உதவியை நிறுத்துவதாக இந்தியாவும், பிரிட்டனும் அறிவித்ததைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளுக்கு உள் நாட்டிலேயே நிதி ஆதாரத்தைத் திரட்டுவோம் என்று நேபாள நிதியமைச்சர் மதுகர் ஷம்ஷெர் ரானா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது எங்களுக்கு உதவி வரும் நாடுகள் இராணுவ நிதி உதவிகளை நிறுத்துமானால் கலகக்காரர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்காகவும், வளர்ச்சிப் பணிகளுக்காவும் வரி விதிப்பை விரிவுபடுத்தி உள் நாட்டிலேயே நிதி ஆதாரங்களைத் திரட்டுவோம். எங்களுக்கு உதவி வரும் நாடுகள் நேபாளத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களைக் கருத்திற் கொண்டு அவற்றின் உதவிக் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாது என்று நம்புகின்றோம். மாவேயிஸ்டுக்களின் பொருளாதார முற்றுகையால் கடந்த இரு வாரங்களாக அரசு வருவாய் வீழ்ச்சி அடைந்து விட்டது. இந்தப் பொருளாதார முற்றுகை நேபாளப் பொருளாதாரத்தை அழிக்கும் முயற்சியாகும். நெடுஞ்சாலைகளில் சரக்கு லாரிகள் உட்பட வாகனங்களின் இயல்பான போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்காக போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

## சுமாத்திராவில் நில நடுக்கம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவிலுள்ள சுமாத்திரா தீவில் சுனாமிக்குப் பிறகும் தொடர் நில நடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. சுமாத்திரா தீவின் மேற்குக் கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் லேசான நில நடுக்கம் ஏற்பட்டது ரிக்டர் அளவில் இது 5.2 எனப் பதிவாகியது.

# அணுவாயுத அபாயத்தைத் தவிர்க்க அமெரிக்கா -ரஷ்யா கூட்டாக உறுதி!

### -உயர் மட்டப் பேச்சில் உடன்பாடு



அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சிற்கும் ரஷ்யா சனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கும் இடையிலான உயர் மட்டப் பேச்சுக்களின் போது ஈரானிடமோ அல்லது வடகொரியாவிடமோ பாரிய அழிவைத் தரும் ஆயுதங்கள் இருக்கக் கூடாது என்ற விடயத்தில் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

அணுவாயுதத் தாக்குதலினால் ஏற்படும் ஆபத்திலிருந்து நாடுகளைப் பாதுகாக்கவென நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையிட்டு இரு நாடுகளின் தலைவர்களும் உடன்பட்டுள்ளனர். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையிட்டும் அவர்கள் உடன்பட்டுள்ளனர்.

உச்சிமாநாட்டின் பின்னர் செய்தியாளரிடம் கருத்துத் தெரிவித்த அமெரிக்க சனாதிபதி புஷ் உலக வர்த்தக ஸ்தாபனத்தில் ரஷ்யா சேர்ந்து கொள்வது சம்பந்தமான பேச்சுக்களை இரண்டு வல்லரசுகளும் வரவேற்கின்றன என்றார்.

இதனையடுத்து ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின் கருத்துத் தெரிவிக்கையில் ரஷ்யாவில் சர்வாதிகார ஆட்சி மீண்டும் ஏற்பட மாட்டாது என்று கூறியதுடன் அடிப்படை சனநாயக உரிமைகளிற்குத் தனது நாடு மதிப்பளித்து வருகின்றது என்றும் ரஷ்யாவில் தற்போது ஏற்பட்டுள்ள அபிவிருத்தி இதனைப் பிரதிபலிக்கின்றதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



இந்தோனேசியாவின் ஆசே மாநில பண்கல கிராமறி அகதி மூகாமில் குழந்தை ஒன்று சுனாமியால் பாதிப்படைந்தவர்களின் பெயர்ப் பட்டியலைச் சுட்டிக் காட்டுகின்றது.

# பின்லேடன் பெயருக்கு அங்கீகாரம்

(ஜெனீவா)

சர்வதேச பயங்கரவாதி எனக் கூறப்படும் ஓசாமா பின்லேடனின் தம்பி எஸ்லாம் பின்லேடன் சுவிட்சர்லாந்து நாட்டில் ஜெனீவா நகரில் வசித்து வருகிறார். அங்கு அவர் தொழில் வர்த்தகத்தில் ஈடுபட்டு இருக்கிறார். அவர் வணிக முத்திரைப் பெயராக பின்லேடன் பெயரைப் பதிவு செய்து இருக்கிறார். இதற்கு அந்த நாட்டு அதிகாரிகள் அனுமதி அளித்துள்ளனர்.

அந்தப் பெயரில் வர்த்தகப்பொருளை சந்தைப்படுத்தும் நோக்கம் உடனடியாக தனக்கு இல்லை. ஆனால் மற்றவர்கள் அதைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவே பதிவு செய்து இருக்கிறேன் என்று எஸ்லாம் கூறியிருக்கிறார்.

# பொலிஸ் தலைமையகக் கட்டடம் மீது ரிக்றிட்ரில் கார்க் குண்டுத்தாக்குதல்

### -15 பொலிசார் பலி;22 பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் சதாம் உசேனின் சொந்த ஊரான ரிக்றிட்ரில் பொலிஸ் தலைமையகக் கட்டடம் ஒன்றில் கார்க் குண்டுவெடித்ததில் 15 பேர் பலியானார்கள். மற்றும் 22 பேர் காயமடைந்தனர்.

ஈராக்கில் உள்ள ரிக்றிட் நகரம் முன்னாள் சனாதிபதி சதாம் உசேனின் சொந்த ஊராகும். இந்த ஊரில் பொலிஸ் தலைமை நிலையக் கட்டடம் ஒன்று உள்ளது. இந்தக கட்டடத்திற்குள் நேற்று முன்தினம் கார் ஒன்று வந்து நின்றது. திடீரென அந்தக் காரிலிருந்து வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. இந்த பயங்கரமான குண்டுவெடிப்பில் அந்தக் கட்டடமே தீப்பற்றி எரிந்தது. அருகிலிருந்த வாகனங்கள் தூள் தூளாக சிதறியது. அந்த இடத்தில் 10 பொலிசார் உடல் சிதறிப் பலியாகினர். காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் மேலும் 5 பேர் பலியானார்கள். காயமடைந்த 22 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குண்டுவெடிப்பில் ஈடுபட்ட தீவிரவாதிகளைப் பிடிக்க அமெரிக்க பாதுகாப்பு படையினர் நகரைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். நகரை விட்டுயாரும் வெளியேறாத படி கண்காணிப்பிலும் பொலிசார் ஈடுபட்டிருந்தனர்.

ரிக்றிட் நகர் பாக்தாத்திலிருந்து 130 கி.மீ. தொலைவில் உள்ளது. ஈராக் முழுவதும் அமெரிக்க படைகளுக்கெதிராக ஈராக் தீவிரவாதிகள் தொடர்ந்து இது போன்ற தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




வியட்னாமில் மிருகப் பாதுகாப்பு, உணவு, விவசாய அமைப்புக்களின் பணிப்பாளர் சாமுவேல் யுட்சி பறவைக்காய்ச்சல் தொடர்பான கலந்துரையாடலை முடித்துக் கொண்டு செய்தியாளர்களிடம் பேசுகின்றார்.

# அமெரிக்க சனாதிபதி புஷ்சைக் கொல்லச் சதி! முஸ்லிம் இளைஞர் சந்தேகத்தில் கைது!

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி புஷ்சைக் கொல்ல சதி செய்ததாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதை அந்நாட்டு நீதித்துறை அறிவித்துள்ளது. கைது செய்யப்பட்டுள்ள அஹமத் உமர் அபு அலி, கொலைத் திட்டம் குறித்து அல்ஹைய்தா அமைப்பில் உள்ள ஒருவரிடம் சவுதி அரேபியாவில் ஆலோசித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டிலும், 2002ஆம் ஆண்டிலும் ஒரு மாணவராக, சவுதிக்குச் சென்றிருந்தார் புஷ்சைக் கொல்ல இரு விதமான திட்டங்களை அபு அலியும் அவரது சகாவும் திட்டம் தீட்டினர் எனக் குற்றம் சாட்ட ப்பட்டுள்ளது.இது தவிர வேறு பல நடவடிக்கைகள் தொடர்பாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே 2003இல் சவுதியில் குற்றச்சாட்டு ஏதும் இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இதைத் தொடர்ந்து அவரது பெற்றோர் வழக்குத் தொடர்ந்தனர்.

# பறவைக் காய்ச்சல் பரவுகிறது வியட்னாமில் 13 பேர் பலி!

வியட்நாமில் கடந்த சில மாதங்களாக ஓய்ந்திருந்த பறவைக்காய்ச்சல் நோய் மீண்டும் வேகமாகப் பரவி வருகிறது. கடந்த 2003ஆம் ஆண்டு பறவைக்காய்ச்சலுக்கு 32 பேர் பலியானார்கள். கடந்த ஆண்டில் 23 பேர் இந்த நோய்க்கு பலியானார்கள்.

இந்த ஆண்டு மீண்டும் இந்த நோய் தலை தூக்கியுள்ளது. 18 பேர்களுக்கு இந்த நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களில் 13 பேர் பலியாகியுள்ளனர். 5 பேர் மட்டும் சிகிச்சைக்குப் பிறகு குணம் அடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

# அம்பாறையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 2ஆவது தற்காலிக குடியிருப்பு திறப்பு விழா

(அலுவல செய்தியாளர்)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அம்பாறையில் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினரால் அமைக்கப்பட்ட இரண்டாவது தற்காலிக குடியிருப்பு இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.**

சுனாமிப் பேரலைப் பேரழிவினால் பாதிக்கப்பட்டு வீடு வாசல்களை இழந்த மக்களை, தற்காலிக மாதிரிக் கிராமங்களை அமைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தினரால் ஏற்படுத்திக் கொடுக்கப்படவிருப்பதும் குறிப் பிடத்தக்கது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சுனாமிப்



அமைக்கப்பட்ட குடியிருப்பு



மருத்துவ ஆலோசனை

குடியேற்றிவருகிறது. அந்த வகையில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட இரண்டாவது மாதிரிக்கிராமம் ஆலையடிவேம்பு பிரதேச சபைக் குட்பட்ட கவடாப்பிட்டி என்னும் இடத்தில் அமைக் கப்பட்டுள்ளது. இக்கிராமத்தின் திறப்பு விழா இன்று பிற்பகல் 4.30 மணிக்கு இடம் பெற விருப்பதுடன் மக்களுக்கான வீடுகள் கையளிக்கும் நிகழ்வும் நடைபெறவிருக்கிறது.

இங்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி யான வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து அடிப்படை வசதிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சுகாதார சேவை கள் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சமூக நலன்புரி நிறுவனத்தினர் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் நலன்புரி நிலையங்களுக்கு மருத்துவ சேவையை அளித்துவருகின்றனர். அந்த வகையில் கவடாப்பிட்டி யில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்திற்கு அவுஸ் திரேலியாவிலிருந்து வருகைதந்திருந்த 11 பேர் கொண்ட மருத்துவக்குழுவினர் நேற்று முன்தினம் சேவையை வழங்கியுள்ளனர். (சோ)

# முல்லை.மாவட்ட பதிவாளர் பணிமனைக்கு நிரந்தரக் கட்டடவசதி இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பதிவாளர் அலுவலகம் இயங்குவதற்கு நிரந் தரக் கட்டடம் இல்லாததால் கச்சேரி யில் பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்குவதாக மாவட்ட மேலதிகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவுக்கு கடந்த புதன் கிழமை வருகை தந்திருந்த வட-கிழக்கு உதவிப்பதிவாளர் சதாசிவம் இது தொடர்பாக தெரிவிக்கையில்; சுனாமியால் பாதிக்கப்பட்டவர் களுக்கு மிக முக்கியமான பணி யினை ஆற்றி வரும் இந்தப் பணி மனைக்கு இட வசதியோ தளபாட வசதியோ இல்லாததினால் முழுமை யான சேவையினை மக்களுக்கு உடனடியாக வழங்க முடியாமல் இருப்பதாகக் கூறினார. (20)

# முல்லை. வர்த்தகர்கள் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு பிரதேச வர்த்தகர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

வர்த்தக சங்கச் செயலாளர் மனோ தலைமையில் நடைபெற்ற



மேற்படி கலந்துரையாடலில் சுனாமியினால் வர்த்தகர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்தும், அதற்காக இதுவரை வர்த்தகர்களுக்கு எதுவித மான உதவிகளும் கிடைக்கவில்லை என்றும்,

முல்லைத்தீவில் செயற்படும் மூன்று வங்கிகளுடனும் தொடர்பு கொண்டு இது பற்றி கதைத்தபோதும் கடனடிப்படையில் உதவி செய் வதற்கு கூட தயங்கும் நிலை காணப்படுவதாகவும் இதில் இலங்கை வங்கி மட்டும் கடன் வழங்குவதாகக் கூறியுள்ளதாகவும் செயலாளர் மனோ தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் போது புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப் பட்டது. இதில் தலைவராக முன்னாள் செயலாளர் மனோ அவர்களும், செயலாளராக அறிவு அவர்களும், உபதலைவராக தர்மசீலன் அவர் களும், உபசெயலாளராக யசோதரனும் தெரிவு செய்யப்பட்டனர். இக்கலந் துரையாடலில் பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் மற்றும் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். (கு,ச,20)

## சிரமதான நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை நிலையத்தின் மூன்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சிரமதான நிகழ்வொன்று மேற்படி நிலையத்தில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் பூநகரி நல்லூர் மகாவித்தியாலய அதிபர், ஆசிரி யர்கள், மாணவர்கள் மற்றும் திலீபன் மருத்துவசேவைப் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் (சோ)

## திறப்பு விழா

முல்லைத்தீவு அன்னம்மாள் கோவிலடி இடைத்தங்கல் முகாமில் தமிழீழ நிருவாகசேவையினரின் ஏற்பாட்டில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நேற்று முன்பள்ளி திறந்து வைக் கப்பட்டது. மேற்படி நிகழ்வில் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அவர்கள தேசியக் கொடியை ஏற்றி வைத் தார். இந் நிகழ்வின் போது முன் பள்ளிச் சிறார்களுக்கான கற்றல் உபகரணப் பொதியினை முல்லை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வே.மயூரன் அவர்கள் வழங்கினார்.

# தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினர் கற்றல் உபகரணங்கள் வழங்கினர்

(அலுவலக செய்தியாளர்)

டயலொக் ஜி.எஸ்.எம் அனுசரணையுடன் தமிழ் தகவல்த் தொழில் நுட்ப ஒருங்கமைப்பினரால் முல்லைத்தீவு பாடசாலை மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்கான கற்றல் உபகரணங்கள் ஒரு தொகுதி அன்ப ளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.




மேற்படி உபகரணங்களை நேற்று முன்தினம் காலை 11.00 மணியள வில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் வைத்து மேற்படி நிறு வனத்தின் இணைப்பாளர் ந.நவஜீவன் வழங்கினார். நிகழ்வில் முல்லைத் தீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 220 மாணவர்களுக்கும் 30 ஆசிரியர்களுக் கும் மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு,ச,20)

## –முள்ளியவளை, புதுக்குடியிருப்பில்– அடையாள அட்டைகள் வழங்க இரண்டு நாள் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் தேசிய அடையாள அட்டையை இழந்த மக்களுக்கான நடமாடும் தேசிய அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளதாக முல்லை.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.இரண்டு நாட்களும் முள்ளியவளையிலும், புதுக்குடியிருப் பிலும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளதெனவும் தேசிய அடையாள அட்டை பெறவருவோர், காணாமல் போன அடையாள அட்டையின் இலக்கம் தெரிந்தால் அதனையும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இருந்தால் அதனையும் கொண்டு வருகை தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். சுனாமியால் அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்கள். அனைவரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். (20)



தாய் ஆடு இறந்த பின்பு ஆட்டுக்குட்டிகள் இரண்டினையும் நாயொன்று பால் ஊட்டி பாதுகாத்துவரும் சம்பவம் கிளிநொச்சி திருநகர் பகுதிப் பண்ணை ஒன்றில் இடம் பெற்றுவருகின்றது. மேற்படி நாயின் அரவணைப்பில் பால் ஊட்டி வரும் நாயினையும் ஆட்டுக் குட்டிகளையும் படத்தில் காணலாம். (சோ)

# இராமநாதபுரம் பகுதியில் வீடு முற்றாக எரிந்து நாசம்

(வட்டக்கச்சி)

இராமநாதபுரம் புதிய சிவிக் சென்ரர் பகுதியில் வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. தாய், தந்தையர் வெளியில் சென்றிருந்த வேளையில் அவர்களது குழந்தைகளான ஆறு வயதுச் சிறுவனும் , நான்கு வயதுச் சிறுமியும் வீட்டிலிருந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. மார்க்கண்டு என்பவரின் வீடே கடந்த திங்கட்கிழமை தீப்பற்றி எரிந்தது. (12)

## – இடம் பெயர்ந்த நிவாரணம் – 2004–செப்ரெம்பரிலிருந்து வழங்கப்படவில்லை முல்லைத்தீவு மக்கள் அ.அதிபரிடம் முறைப்பாடு

போரினால் இடம் பெயர்ந்தவர் களுக்கான நிவாரணத்தில் கடந்த வருடம் 9,10,11, 12ஆம் மாதங் களுக்கான உணவுப் பொருட்கள் வழங்கப்படாததையிட்டு முல்லைத் தீவு கள்ளப்பாடு மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபரை அவருடைய செயலகத்தில் சந்தித்து கலந்துரை யாடினார்கள்.

உடனடியாக அவற்றை வழங்கு மாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு முல்லை மாவட்ட அரச அதிபர் பணித்ததோடு மீளக்குடிய மர்வு நிவாரணம் ரூபா 25,000 எடுத்த நாளிலிருந்து 15 மாதங்களின் பின்னர் இடம் பெயர்ந்த நிவாரணப் பொருட்கள் வழங்க முடியா தெனவும் ஏனையோர்களுக்கே அந்த நிவாரணம் வழங்கப்படுமெனவும், அதே மக்கள் தற்போது சுனாமி யால் பாதிக்கப்பட்டுள்ளதால் ஒரு அங்கத்தவருக்கு ஒரு முத்திரை வீதம் அனைவருக்கும் வழங்கப் படவுள்ளதாகவும் முல்லை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (20)

# எம்மைச் சீண்ட எத்தனித்தால் பொறுமையைக் கடைப்பிடியோம்

## யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்

(நல்லூர்)

**எம்மையாரும் சீண்ட எத்தனித்தால் நாம் எந்தநாளும் பொறுமையைக் கடைப்பிடிக்க மாட்டோம். அன்று நாம் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைமைக்கு இட்டுச் செல்லப்பட்டோம். அதனால் ஆயுதம் ஏந்தினோம். இன்று சாத்வீகம் பேணவேண்டும் என்பதற்காக சாத்வீகத்தை அமைதியான முறையில் கடைப்பிடிக்கின்றோம் என யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந் தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் யாழ்ப்பாண கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் மத்தியஸ்தர் சங்கத்திற்கும் இடையே காணப்படும் பிரச்சினை வடக்கு -கிழக்கில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் கிரிக்கெட்டுடன் தொடர்புடையவர்களுக்கும் தெரிந்த பிரச்சினையாகும்.

குறுகிய நாளில் இப்பிரச்சினைக்கு நாம் நல்லதொரு தீர்வைக் கொண்டு வரவுள்ளோம். இதன் மூலம் எதிர்காலத்தில் கிரிக்கெட் நல்ல முறையில் வளர்வதற்கு வழிஏற்படுத்தப்படும். இதனையிட்டு எவரும் சந்தேகப் படத் தேவையில்லை.

இதுவரை நாம் ஏனைய விளையாட்டுக்களில் கவனத்தைச் செலுத்தினோம் தற்போது நாம் கிரிக்கெட் சம்பந்தமான விளையாட்டில் கவனம் செலுத்தவுள்ளோம். ஏனைய விளையாட்டுகள் தற்போது நல்ல முறையில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன அது போன்று கிரிக்கெட்டும் இயங்க வேண்டும்.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டம் விரைவில் கூட்டப்படவுள்ளது. இக் கூட்டத்திற்கு ஏற்கனவே தடைகள் விதிக்கப்பட்ட மற்றும் வெளியேறிய கழகங்களும் கூட அழைக்கப் பட்டே கூட்டம் நடத்தப்படும்.

நாம் எச்சந்தர்ப்பத்திலும் பிழையான முடிவுகளை எடுக்க மாட்டோமெனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கு நாம் யாரும் பலியாகிவிடக் கூடாது. இதன் ஒரு கட்டமாகவே இன்று எம்மிடையே கூட ஒரு பிளவை உண்டாக்கும் முயற்சியும் இடம் பெற்றுள்ளது. இதனை முறியடிப்பதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தென்னிலங்கை சக்திகளுடன் பேரம் பேச வேண்டுமெனவும் குறிப்பிட்டார். (41)

---

- வடக்குக்கிழக்கில் மட்டும் -

## சுனாமிப் பேரலையால் 37 ஆசிரியர்கள் பலி

சுனாமிப் பேரனர்த்தம் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதியில் முப்பத்தேழு ஆசிரியர்கள் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படியே இத்தகவல் வெளிவந்துள்ளது. ஆயினும் இதன்தொகை அதிகமாகக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## சுனாமியால் உயிரிழந்த ஆசிரியர்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப் பேரனர்த்தத்தால் உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவாக பத்து ஆயிரம் ரூபாவை வழங்க இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் சுனாமி காரணமாக இறந்த ஆசிரியர்களின் விபரங்கள் மற்றும் குறிப்பிட்ட ஆசிரியர் சுனாமித் தாக்கத்தால் உயிரிழந்தமையை உறுதிப்படுத்தும் மரணச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் உயிரிழந்த ஆசிரியர்களது குடும்ப அங்கத்தவர்கள் யாராவது விண்ணப்பித்தால் அவர்களுக்கு இந்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் கனடா மருத்துவர் குழு சிகிச்சை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர வைத்தியசாலையில் வரும் திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை கனடா நாட்டைச் சேர்ந்த நரம்பியல் நிபுணர் மற்றும் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சிகிச்சைகளை வழங்கவுள்ளனர்.

சகல நோய்த்தாக்கங்களுக்கும் உள்ளானவர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துமாறும், நரம்பியல் சம்பந்தமான நோயாளிகள் முக்கியமாக பயன்படுத்திக் கொள்ளுமாறும் வைத்தியசாலையின் தலைமை வைத்தியர் தெரிவித்துள்ளார். (28)

---

## மீன்பிடியியல் டிப்ளோமா; உடனடியாகப் பதிவு செய்க

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் மீன் பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியைத் தொடர்வதற்கு அனுமதி பெற்றவர்கள் அனைவரையும் எதிர்வரும் திங்கட் கிழமைக்கு முன்பதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு இணைந்து கொள்ளவுள்ள புதிய மாணவர்களுக்கு உடனடியாகவே விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும் எனவே விண்ணப்பித்து அனுமதி பெற்றவர்கள் தாமதிக்காது பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (33)

## அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கால் சுனாமி உதவிகளைப் பெற முடியவில்லை

### -கடற்றொழிலாளர் சமாசத்தலைவர் விசனம்

(காரைநகர்)

யாழ்.காரைநகர் பிரதேசத்தில் உயர் பதவிகளில் இருக்கும் அரசாங்க அதிகாரிகளின் அசமந்தங்கள் காரணமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட காரைநகர் பிரதேச மீனவர்கள் தமக்கான நிவாரண மற்றும் புனர் வாழ்வு உதவிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் தலைவர் தவரட்ணம் விசனம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களை கடுமையாகத் தாக்கிய சுனாமி ஆழிப்பேரனர்த்தங்கள் காரணமாக காரை நகர் பிரதேசத்திலுள்ள ஆறு கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த நானூறிற்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

எனினும் இவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கோ பாதிக்கப்பட்ட இம் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்புவதற்கோ இப் பகுதிக்கு பொறுப்பாக விருக்கும் உயர் அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இவ்வாறு அரச அதிகாரிகளின் அசமந்தமான போக்கு பாதிக்கப்பட்ட மீனவர்களை பெரும் பின்னடைவுகளைச் சந்திக்கச் செய்துள்ளதெனவும் தவரட்ணம் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## மருதங்கேணி வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை

(மருதங்கேணி)

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி அரசினர் வைத்திய சாலையில் ஆளணிப்பற்றாக்குறை நிலவி வருகிறது.

இவ் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலையின் சிகிச்சைப்பிரிவுகள் செயலிழந்து போகும் அபாய நிலை இருப்பதாகவும் உள்ளக நோயாளர் பிரிவு இதனால் முற்றாக செயலிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் தமக்கான வைத்திய தேவைகளைப்பூர்த்தி செய்வதில் பல இன்னல்களையும் அனுபவித்து வருகின்றனர். (33)

## உண்ணிக்காய்ச்சல் பரவுகிறது; மக்கள் விழிப்பாக இருக்கவும்

### - வைத்திய அதிகாரிகள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உண்ணிக் காய்ச்சல் நோய் வேகமாகப் பரவி வருவதாக வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மிருகங்களை ஒட்டிவாழும் உண்ணிகளால் பரவும் இவ் உண்ணிக்காய்ச்சல் நோய்க்கு இலக்காகி கடந்தமாதம் 117 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆபத்தான இந் நோய்குறித்து மக்களை விழிப்பாக இருக்குமாறும் திடீர்க்காய்ச்சல், வழமைக்குமாறான தலைவலி, தசைப்பிடிப்பு போன்றவை இவ் உண்ணிக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் என்றும், அறிகுறிகள் தென்படுபவர்கள் உடனடியாக சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும் வைத்திய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (33)

## விசேட ஒன்று கூடலில் கலந்து கொள்ள அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பெண்கள் பண்பாட்டுமையத்தின் ஏற்பாட்டில் "அரங்காலயம்" எனும் தலைப்பில் பெண்களுக்கான விசேட ஒன்று கூடல் நிகழ்வு நாளை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பெண்களின் மன உணர்வுகளைப் பகிர்ந்து அவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமான தீர்வுகளை எடுப்பதற்கான இக்கூட்டத்திற்கு பெண்கள் அனைவரையும் சமுகம் தருமாறு பெண்கள் பண்பாட்டுமையம் கேட்டுள்ளது. (33)

## இருபாலைப் பகுதியில் சட்ட விரோத மின் பாவனை

(யாழ்ப்பாணம்)

யாழ் இருபாலைப்பகுதியில் சட்ட விரோத மின் பாவனையாளர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

சட்டவிரோத மின் பாவனையால் பிரதான மின் இணைப்புக்களில் அடிக்கடி கோளாறுகள் ஏற்படுவதாகவும் இதனால் இப்பகுதிக்கான மின் இணைப்பு தடைப்படுவதாகவும் அப்பகுதி மின்பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

## வைத்திய அதிகாரி பணிமனை திறப்பு

யாழ்.மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வரும் திங்கட்கிழமை காலை8.30 மணியளவில் மானிப்பாயில் திறந்துவைக்கப்படவுள்ளது.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இது திறந்து வைக்கப்படுகிறது. (33)

## சாவகச்சேரி நகரசபை கழிவுகளை தாவரங்களுக்கு உரமாக்குக

### - நகரசபையினர் மக்களிடம் கோரிக்கை

(சாவகச்சேரி)


வீட்டுக்கழிவுகளை வீதிகளிலோ கைவிடப்பட்ட காணிகளிலோ வீசி சுகாதார சீர்கேடுகளை உருவாக்காது அவற்றை தாவரங்களுக்கு உர மாகப் பயன்படுத்துமாறு சாவகச்சேரி நகரசபையினர் கோரியுள்ளனர். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை கொட்டுவதில் எழுந்துள்ள நடைமுறைச்சிக்கல்களால் அவர்கள் இவ்வாறு கோரியுள்ளனர். அல்லது வீட்டுக் கழிவுப் பொருட்களை நிலத்தில் புதைக்குமாறு சாவகச்சேரி நகர சபையினர் மக்களிடம் கேட்டுள்ளனர். (33,28)

## அன்பளிப்பு

(சாவகச்சேரி)

யு.என்.எச்.டி.டி.பி என்ற தனியார் தொண்டு நிறுவனத்தின் விருந்தினர் விடுதியில் பயன்படுத்தப்பட்டு வந்த மரத்தளபாடங்கள், கட்டில்மெத்தைகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள், யாழ். அரசாங்க அதிபரின் பணிப்புக்கு அமைவாக இத்தொண்டு நிறுவனத்தினரால் சாவகச்சேரி நகர வைத்திய சாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இவ்வாறு வழங்கப்பட்டன. (28)

## மோசடியைத் தவிர்க்க வங்கியில் புதிய இயந்திரம்



பணக் கொடுக்கல் வாங்கலின் போது வங்கிகளிலும் ஏனைய நிறுவனங்களிலும் மோசடிகள் ஏற்படுவதைத் தடுக்கும் புதிய இயந்திரம் ஒன்று ஜப்பானில் பிரபலமாகியிருக்கின்றது.

தற்போது அறிமுகமாக இருக்கும் இவ்வியந்திரம் நடுவிரலால் மட்டும் அழுத்தி பயன்படுத்தக் கூடிய ஒன்றாகும் மாஸ்ரர் காட், கிறடிற் காட், A.T.M காட் மோசடிகளைத் தடுக்க இந்தக் கருவி பெரிதும் உதவும்.

## மூளையின் செயற்பாட்டை அறியும் கருவி

மனிதனுக்கு ஏற்படும் வலிப்பு தொடர்பாக கண்டறியும் கருவியொன்றை ஜெர்மனிய நிறுவனமொன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

இது ஸ்கேன் இயந்திரத்தை ஒத்த கருவியாகும். "7T" எனப்படும் இச் சாதனம் மனித மூளையின் செயற்பாடுகள், ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றை இலகுவில் கண்டுபிடிக்கக்கூடியதாகும்.



## 24 கரட் தங்கத்தில் கட்டப்பட்ட கழிப்பறை



ஹொங்கொங்கில் 24 கரட் தங்கத்தில் கட்டப்பட்ட கழிப்பறையுள்ளது. ஹொங்கொங்கில் உள்ள நகைக்கடை ஒன்றில் முழுக்க முழுக்க 24 கரட் தங்கம் மற்றும் வைரக்கற்களால் கட்டப்பட்ட கழிப்பறையுள்ளது. இந்தக் கழிப்பறை ஹொங்கொங் அரசின் சுற்றுலாத்தகவல் கையேட்டிலும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் சமீப காலமாகத் தங்கக்கழிப்பறையைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளை நகைக்கடை ஊழியர்கள் அலட்சியப்படுத்துவதாக புகார் எழுந்துள்ளது. இதையடுத்து ஹொங்கொங் அரசு தனது சுற்றுலாத்தகவல் கையேட்டிலிருந்து தங்கக் கழிப்பறை சிறப்புப் பகுதிகளை நீக்கி விட்டது.


## வாயுக் கோள்கள்

பிரபஞ்சத்தில் பொருடகள் திரண்டு சூரிய மண்டல ங்கள் தோன்றுகின்றன. போதுமான திரட்சி இருந்தால் மாத்திரமே அந்தக் கோளிடத்தில் அணுக்கரு இணைவு ஏற்பட்டு வெப்பமும், ஒளியும் பிறக்கும். இப்படித்தான் சூரியன் உருவாகியது.

சூரியனுக்கு அந்தத்தகுதி இருந்தால் அது வெப்பக் கோளமாக இருக்கிறது. அதன் பிறகோள்களுக்கு போதிய திரட்சி இல்லாததால் அவற்றில் கரு இணைவும் சக்தி வெளியேற்றமும் இல்லாமல் போய் குளிர்ந்து விட்டன.

மேலும் சூரிய மண்டலம் முதிர் வடைந்து சூரியனும், கோள்களைப் போன்று மாறும்போது அதிக நிறையுடைய இரும்பு, சிலிக்கன், மெக்னீசியம் போன்ற பொருட்கள் கோள்களுக்கும், பெரும் பகுதி ஹைட்ரஜன் சூரியனுக்குமாகப் பிரித்து விடுகிறது. பூமி போன்ற கோள்கள் குளிர்ந்து இறுகிப்போனதற்கு இதுவும் ஒரு காரணம்தான். ஜூபிட்டர், சனி ஆகிய கோள்களும் சூரியன போல வாயுக் கோளம்தான் என்றாலும், போதிய நிறைத்திணிவு அடையாததால் சூரியன் போல அவற்றால் சுயப்பிரகாசம் அடைய முடியாமல் குளிர்ந்து விட்டன.

## கவாட் பல்கலை விஞ்ஞானிகள் எச்.ஐ.வி. ஆய்வில் முன்னேற்றம்



மனித குலத்தை ஆட்டிப்படைத்து வரும் எச்.ஐ.வி. கிருமிகள், நோய் எதிர்ப்பு அமைப்பைத் தாண்டிச் சென்று உடல் செல்களுக்குள் எப்படிச் செல்கிறது என்பதை கவாட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

எச்.ஐ.வி.கிருமிகளின் புறப்பரப்பில் காணப்படும் GP120 என்ற குறிப்பிட்ட புரோட்டீன் முப்பரிமாணப்படம் விஞ்ஞானிகளுக்குக் கிடைத்துள்ளது. செல்களில் காணப்படும் சி.டி-4 என்ற ஏற்பிகளை பாதிப்பதற்கு முன்பாக இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து செல்களை பாதித்த பிறகு முப்பரிமாணத் தோற்றம் எப்படியிருக்கும் என்று கண்டுபிடிக்க தீவிரமாக முயற்சி நடக்கிறது. அந்த முப்பரிமாண படமும் கிடைத்துவிட்டால் எச்.ஐ.வி.கிருமிகள் மனித செல்களை தாக்குவதற்கு முன் எப்படி இருந்தது. மனித செல்களுக்குள் புகுந்தவுடன் எப்படி உருமாற்றம் செய்துகொள்கிறது என்ற அரிய விவரம் துல்லியமாகத் தெரியவரும்.


இதன் மூலம் எச்.ஐ.வி. கிருமிகள் செல்களுக்குள் புகுவதற்கு முன்பே அதைத் தடுத்து நிறுத்தவோ, அல்லது செயலிழக்கச் செய்யவோ வழி பிறக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. எச்.ஐ.வி.கிருமிகளின் உருமாற்றம் எப்படி. எப்படி இருக்கும் என்ற விவரம் கிடைத்து விட்டால் அந்தக் குறிப்பிட்ட உருமாற்றம் நடைபெறாமல் செய்து அதன் மூலம் மனிதசெல்களை எச்.ஐ.வி கிருமிகள் தாக்குவதிலிருந்து தடுக்கமுடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். எய்ட்ஸ் நோய்க்கு மருந்துகள் கண்டுபிடிக்க பல்வேறு நாடுகளிலும் ஆராய்ச்சிகள் ஒருபுறம் நடந்துவந்தாலும், அந் நோய்க்கு முழு முதல் சூத்திரதாரியான எச்.ஐ.வி கிருமிகளையே வலுவிழக்கச் செய்து விட்டால் இன்னும் சிறப்பான முடிவு கிடைக்கும் என்பது உண்மையே.

## பனிக்கட்டி விடுதி



ஆஸ்திரியா நாட்டில் தற்போது கடும் குளிர் நிலவுகிறது. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி அந்நாட்டின் ஸ்கூல்டென் நகர மலைப் பிரதேசத்தில் நான்கு இளைஞர்கள முழுக்க பனிக்கட்டியாலான சொகுசு விடுதியைக் கட்டியுள்ளனர். இந்த விடுதியில் மதுக்கடை, சமையலறை, தங்கும் அறை உட்பட அனைத்து வசதிகளும் உள்ளன. மேசை, கதிரை, கட்டில் உட்பட அனைத்துப் பொருட்களும் பனிக்கட்டியினாலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. விடுதிக்கு வரும் வாடிக்கையாளர்கள் குளிரைத் தாங்கிக் கொள்வதற்காக அவர்களுக்கு சிறப்புக் கம்பளி உடைகள் வழங்கப்படுகின்றன.

## புகைப்படங்களை பிரதிசெய்ய புதிய முறை கண்டு பிடிப்பு



புகைப்படக்கலையைப் புதிய முறையில் மாற்றுவதற்கு ஜப்பான் திறமைபெற்றிருக்கிறது.

புகைப்படங்களை பிரதிசெய்யக் கூடிய டயோட் எனப்படும் இதன்மூலம் புகைப்படங்களைப் பிரதி செய்து பதிப்பதில் நிகழும் ஒளி அலைகளை அதிகரிக்க முடியும். புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இது ஒளிக்கதிர் மூலம் பிரதியாக்கலில் புதிய கண்டுபிடிப்பாகும். இதுவரை பயன்பாட்டிலுள்ள பிரதிசெய்தல் முறைக்குப் பதிலாக இச்சிறியகருவி கூடிய ஒளிக் கதிர்களை விநியோகிக்கக் கூடிய ஒன்றாகும்.

எனக்குக் காய்ச்சல் குணமாய் இருந்ததால அண்டைக்கு தொழிலுக்குப் போகேல்ல வீட்டில தான் இருந்தனான். என்ர மனுசிக்கும் காய்ச்சல் அவாவும் வீட்டிலதான் நிண்டவா ஏலாததால தனக்கு தேத்தண்ணி வைச்சுத்தரச் சொன்னா. அப்ப நான் அடுப்ப மூட்டி தேத்தண்ணியை வைச்சன்.

தேத்தண்ணி வைச்சு மூட்டிப் போட்டு தம்பியைக் கூப்பிட்டு அம்மாட்ட போய் றொட்டி சுட்டுச் சாப்பிடுவமாம் ஒருக்கால் மாவைக் குழைச்சுத்தரட்டாம் எண்டு சொல்லு என்று அனுப்பிவிட்டேன். அவன் போய்ச் சொல்லி இருக்க வேணும் அவா எழும்பி வந்து சொன்னர் "விறகுகளும் இல்லை அப்பா றொட்டி சுடுறதவிட உதில இருககிற கடையில போய் பாண் வேண்டி வந்து தேத்தண்ணியோட சாப்பிடலாம். நீங்கள் தேத்தண்ணியை ஊத்துங்கோ நான் பாண் வேண்டிவாறன்" எண்டு சொல்லிக் கொண்டு வெளிக்கிட்டா.

அப்ப நான் யோசிச்சுப் போட்டு அந்தக் கடையில போய் பாண்வேண்டி வாறதவிட மாமி வீட்டிலபோய்ச் சாப்பிட்டுட்டு வருவம் எண்டு நானும் மனுசியும் பிள்ளையுமா வெளிக்கிட்டு கடற் கரையில இருக்கிற மாமி வீட்ட பாணையும் வேண்டிக் கொண்டு போனம்.

அங்கபோய் மாமி வீட்டுக் குசினிக்குள்ள இருந்து சாப்பிட வெளிக்கிட்டுட்டு கருவாடு சுட்டால் நல்லாயிருக்கும் அதையும் சுட்டுச் சாப்பிடுவம் எண்டு சொல்ல உடன மனுசி கருவாட்ட எடுத்து அடுப்புக்குள்ள போட்டுச் சுட்டா அந்த வாசத்தோடயே பாணையும் சேத்துச் சாப்பிடலாம் மாதிரி இருந்தது.

கருவாடு சுடுபட்டு முடியுற கட்டத்தில நான் பெடியனோட இருந்தனான். மனுசி சொன்னா கடல்ல ஏதோ சத்தம் கேக்குது எதுக்கும் வெளியால போய் என்னெண்டு

1998 ஆம் ஆண்டு தான் அந்தக் காலும் போனது. முல்லைத்தீவில் இருந்த ஆமிக்காறங்கள் எல்லாரையும் அடிச்சுக் கலைச்சபிறகு சனம் எல்லாம் கடல் தொழில் செய்ய வந்திட்டுதுகள். அப்ப எனக்குப் பதினெட்டு வயது எங்கட வீட்டிலையும் சரியான கஸ்ரம் அதால கடல்ல வந்து கரவலய இழுத்துக் குடுத்துத்தான் உழைக்கிறநாங்கள் அந்த உழைப்பாலதான் எங்கட குடும்பம் வாழ்ந்தது.

அண்டைக்கும் அப்படித்தான் ஒரு செவ்வாக்கிழமை நான் விடிய நேரத்தோட எழும்பிகடலுக்குப் போய் ஒரு சம்மாட்டியற்ற வலை இழுத்துக் கொண்டு நிண்டன் அப்பத்தான் முதலாவது மடி இழுத்துக் கொண்டிருந்தம் எல்லாரும் நல்லாக் கத்திக்கத்தித்தான் இழுத்துக் கொண்டி ருந்தம் எனக்கு முன்னாலை ஒரு மூன்று பேரும் பின்னால நாலுபேரும் நிண்டு தான் இழுத்தவங்கள் நான் நடுவில நிண்டு இழுத்துக்கொண்டிருந்தன் என்ன நடந்தது எண்டே எனக்குத் தெரியாது

போன தோட என்னால ஒண்டும் செய்ய ஏலாமல் போச்சுது. தலைக்கு மேலா்ல கம்பிக்கட்டையள் மரங்கள், தடியள், வீட்டுக்கூரைகள் எல்லாம் வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. இடையில ஒருமரத்தில பிடிச்சன். அந்தக்கொப்பும் முறிஞ்சு போச்சுது. அப்பிடியே நான் உருண்டு போய்க்கொண்டிருந்தன். ஒரு கட்டத்தில றால்குளப்புட்டியில கொண்டு போய் விட்டுது.

அந்தப்புட்டியில ஏறின உடனதான் ஒற்றக்கால்ல எழும்பிநிண்டு என்ர மனுசியையும், பிள்ளையையும் பாத்தன். ஒரே தண்ணிதான் தெரிஞ்சது. ஆக்கள் ஒருத்தரையும் காணவே இல்ல. சிலர் எழும்பி என்ர பிள்ளை, மனுசி, அம்மா, தங்கச்சி, அக்கா, தம்பி, அண்ணா எண்டு கத்திக்கொண்டிருந்தினம். அவயளோட சேர்ந்து நானும் கத்திக்கொண்டிருந்திட்டு ஒற்றக்கால்ல கெந்திக் கெந்தி மனுசி பிள்ளையப் பாத்தன். காணேல்ல. என்னாலையும் ஏலாமல் இருந்தது.

ஏறி அங்காலபோய்ச் சேர்ந்து முள்ளியவளைப்பள்ளிக்குடத்துக்குப் போய்ச்சேந்திட்டன்.

தப்பின ஆக்கள் எல்லாரும் அங்கதானே போய் இருந்தவையள் அதால அங்க யாவது என்ர மனுசியும், பிள்ளையும் போய் இருப்பினம் எண்டு தேடிப்பாத்தன் ஆக்களைக்காணவே இல்லை. மாமிதான் காயப்பட்டபடி இருந்து அழுதுகொண்டிருந்தா என்னைக் கண்ட உடன மாமி " என்ர பிள்ளை எங்க அவளுக்கு ஏதும் நடந்ததோ? இப்ப எங்க இருக்கிறாள்" எண்டு கத்தி அழுதார்.

மாமியிடம் நான் சொன்னேன் அவையளக் காணேல்ல. எங்க போச்சினம் எண்டே தெரியாது. எல்லாரும் ஒவ்வொரு



**1998ஆம் ஆண்டு முல்லைக் கடற்கரையில் தொழில் செய்துகொண்டிருந்த சமயம் இராணுவத்தினர் புதைத்துவிட்டுச் சென்ற வெடிபொருள் வெடித்ததில் தனது ஒருகாலை இழந்த நிலையில் கள்ளப்பாட்டுக்கிராமத்தில் வசித்துவந்த சாமிஜயா சுந்தராஜன் (வயது-24) என்ற இளம் குடும்பஸ்தர் சுனாமிப்பேரலைகளின் கோரத்தில் றாகினி (வயது-22) என்ற மனைவியையும் சயந்தன் (வயது-03) என்ற தனது ஒரேஒரு மகனையும் பறிகொடுத்திருந்தார், அவைபற்றி விபரிக்கிறார்.**

# துன்பங்கள் எல்லாம் எங்களையே சுற்றிச்சுற்றி ஏன் வருகின்றன?

பாருங்கோ என்றா

எனக்கும் சத்தம் வித்தியாசமாய்த்தான் இருந்தது. அதால பெடியனை மனுசிட்ட கொண்டுபோய் விட்டுட்டு வீட்டுக்கு வெளியால வந்து கடலைப் பார்த்தேன். கடல் கெம்பி எழுந்து மலைமாதிரி வந்து கொண்டிருந்தது. அதைப் பாத்த உடனையுமே எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல.

## பகுதி -29

எங்கட மாமிவீட்டுக்கு பக்கத்தில கடல் வந்திட்டுது. நான் "ஐயோ கடல் வருது எல்லாரும் ஓடித்தப்புங்கோ" எண்டு கத்தினபடி வீட்டத்திரும்பிப் பாத்தன் மனுசி பிள்ளையையும் தூக்கினபடி வீட்டுக்கு வெளியால ஓடிவந்தா. அவ வந்ததும் நானும் சேந்து ஓடிக்கொண்டிருந்தம் வேலியாலும் ஒழுங்கையாலும் மாறிமாறி ஒரு நூறு மீற்றர் தூரம் தான் ஓடியிருப்பம் என்னால ஓட ஏலாமல் போச்சுது.

மனுசியிடம் பிள்ளையைக் கொண்டு ஓடித்தப்பு நான் எப்பிடியும் வந்திடுவன் எண்டு சொன்னன்.அவ பிள்ளையையும் கொண்டு கொஞ்சத்தூரமும் போயிருக்கமாட்டா தண்ணி வந்து என்னையும் அடிச்சு அவவையும் அடிச்சு விழுத்திப் போட்டுது

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

எழும்ப ஏலாமல் இருந்தது அப்படி அமத்தினபடிதான் என்னைக் கொண்டு போனது.

தண்ணி அடிச்ச வேகத்தில என்ர பொய்க்காலும் உடுப்பும் கழண்டு போச்சுது.

பெரிய வெடிச்சத்தம் ஒண்டுகேட்டது அதுதான் எனக்குத் தெரியும் அதுக்குப்பிறகு ஒண்டும் தெரியாது ஆஸ்பத்திரியில் போய்த்தான் கண்முழிச்சுப்



பார்த்தன் என்ர கால் ஒண்டு இல்லாமல் இருந்தது.

ஆமிக்காறர் வைத்த மிதி வெடி என்ர கால்ல தட்டுப்பட்டு வெடிச்சது அதால அண் டைக்கு என்ர கால இழந்துபோனன். அதுக் குப் பிறகு பொய்க்கால் போட்டு தொழி லுக்குப் போறனான்.

இப்படியே அந்தக் காலும் கழண்டு

இப்பிடியே அழுதுகொண்டிருக்க ஆரோ ஒருத்தர் என்ரகாலப்பாத்திட்டு திரும்பிப் போய் ஒரு பொய்க்கால் ஒண்டைத்தூக்கிக் கொண்டுவந்து தந்தார். எனக்கு. என்ர

காலக்கண்ட உடன பெரிய சந்தோசமாய் இருந்தது. ஒருமாதிரி அந்தக்காலையும் போட்டுக்கொண்டு தண்ணீக்குள்ளால நடந்து நடந்து தேடினன். ஒருத்தரையும் காணேல்ல அவையள் எங்க அடிபட்டுப் போச்சினமோ தெரியாது.

ஒருகட்டத்தில திரும்பயும் கடல்வரப் போகுது எல்லாரும் ஓடுங்கோ ஓடித்தப்ப ஏலுமான ஆக்கள் ஓடுங்கோ. அடுத்த கடல் வந்தால் இந்தப்புட்டியையும் கரைச்சால் ஒருத்தரும் தப்பஏலாது எண்டு கத்திக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். என்னால் எதுவும் செய்ய முடியாது. அருகில் உள்ள மரத்தில் ஏறுவம் எண்டு ஓடிப் போனால் அதில ஏற ஏலாமல் இருந்தது. அப்பிடியே திரும்பிவந்து ஒரு வள்ளத்தில

திக்காகத்தானே போனது. வேறமுகாங்கள்ள இல்லாட்டி ஆஸ்பத்திரியளிலதான் இருப்பா எண்டு ஆறுதல் சொன்னேன். மாமி சொன்னார். " இல்லை என்ரபிள்ளைக்கும் பேரனுக்கும் ஏதோ நடந்து போச்சுது அவையள் தப்பேல்ல என்ர வீட்ட சாப்பிட வந்த என்ர குஞ்சு சாப்பிடாமலே போச்சேந்திட்டுது என்ர ஐயோ நான் என்ன செய்வன் இந்தக்கடவுளுக்குக் கண்ணே இல்லையா" என்று கதறி அழுதார்.

முகாமுக்கு வந்துகொண்டிருக்கிற எல்லாரையும் என்ர மனுசி றாகினி இருபத்திரண்டு வயது மூன்றுவயதுப்பிள்ளை சயந்தனயும் கண்டனீங்களா என்று கேட்டன். எல்லாருமே காணேல்ல காணேல்ல எண்டு தான் சொன்னார்கள். அவர்கள் காணேல்ல எண்டு சொல்ல நான்நினைச்சன் அவையள் எங்கயோ போய் நிக்கினம் போல இருக்கு அப்பிடியும் செத்திருந்தால் பொடியாவது ஆரும்பாத்திட்டு வந்து சொல்லி இருப்பார்கள் அவையள் எங்கயோ முகாம் மாறிப் போட்டினம் எண்டுதான் நினைச்சன்.

அ.லோகீசன்

இப்பிடியே பொழுது போய்க்கொண்டிருக்க பின்னேரம் போல முள்ளியவளைப் பள்ளிக்குடத்துக்கு பொடியள் வந்து குவிஞ்சு கொண்டிருந்தது. அந்தப்பொடி எல்லாத்தையும் தேடித்தேடி அழுதன் அதுக்குள்ளயும் காணேல்ல.

இண்டைக்கு வரைக்கும் மனுசியையும் பிள்ளையையும் காணவே இல்லை. காலை இழந்த கவலையில இருக்க இப்ப மனுசி பிள்ளையளின்ர கவலை வந்து நிக்குது. என்னதான் செய்யேலும் என்றார் அந்த இருபத்துநான்கு வயது இளைஞன்.

(தொடரும்)

# கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் [கட்டம்II]

## வங்கி கடன் இல: 3935 சீஈ

**1. இரண்டாம் கட்ட வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டச் செலவிற்காக சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தில் பல்வேறு செலாவணிகளில் இலங்கை ஜனநாயகக் குடியரசு கடனைப் பெற்றுள்ளது. இக்கடனின் ஒரு பகுதியை நீர்ப்பாசன புனரமைப்புக்காக கொடுப்பனவாகச் செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

**2. வடக்கு கிழக்கு மாகாண சபை கீழ்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதி வாய்ந்த கேள்விதாரரிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றது.**

**3. கேள்வி ஆவணங்களை கீழுள்ள அட்டவணையில் உள்ள அலுவலகங்களில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 21.03.2005 பிற்பகல் 03.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.**

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் | கேள்விப் பத்திரங்களை வழங்கும் பெற்றுக் கொள்ளும் அலுவலகம் |
|---|---|---|
| 01. | திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டியில் வதிவிடப்பொறியியலாளர் அலுவலகம் அமைத்தல். | பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம், உவர்மலை, திருகோணமலை. T/P NO. 026-2222108 |
| 02. | திருகோணமலை மாவட்டத்தில் கல்லாறில் உத்தியோகத்தர் தங்குமிடமும், நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பங்களாவும் திருத்தம் செய்தல். | பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம், உவர்மலை, திருகோணமலை. T/P NO. 026-2222108 |
| 03. | மகாவலி வெள்ள அணைக்கட்டிலுள்ள காடுகளைத் துப்புரவு செய்தல். | பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம், உவர்மலை, திருகோணமலை. T/P NO. 026-2222108 |
| 04. | மாவலி ஆறு அணைக்கட்டிலும்அதன் அடைவீதியிலும் உள்ள காடுகளைத் துப்புரவு செய்தல். | பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம், உவர்மலை, திருகோணமலை. T/P NO. 026-2222108 |
| 05. | திருகோணமலை மாவட்டத்தில் மண் பரிசோதனை ஆய்வு கூடம் அமைத்தல். | மாவட்ட திட்டப்பணிமனை வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம் இல.62 கூட்டுறவு கட்டடத்தொகுதி, 1ஆம் மாடி, பிரதான வீதி, திருகோணமலை T/P NO. 026-2227132 |
| 06. | மன்னார் மாவட்டத்தில் முருங்கனில் வதிவிட பொறியியலாளர் அலுவலகம் அமைத்தல். | பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம், த.பெ.இல.02 வவுனியா. T/P NO. 024-2222374 |
| 07. | முருங்கனில் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பங்களா திருத்தம் செய்தல். | பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம், த.பெ.இல.02 வவுனியா. T/P NO. 024-2222374 |
| 08 | வவுனியா மாவட்டத்தில் மண் பரிசோதனை ஆய்வு கூடம் அமைத்தல். | மாவட்ட திட்டப்பணிமனை, வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம், கச்சேரி, வவுனியா. T/P NO. 024-2223470 |

**4. கேள்விகள் திறக்கப்பட்ட தினத்திலிருந்து 90 நாட்கள் செல்லுபடியுள்ளதாக இருப்பதுடன் கீழுள்ள அட்டவணையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வங்கியினால் வழங்கப்பட்ட பிணைப்பண சான்றிதழ் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.**

**கேள்விகள் 21.03.2005ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அட்டவணையில் உள்ள அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விதாரரின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.**

**5. கேள்வி ஆவணங்கள் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கட்டணங்கள் ஏதுமின்றி குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.**

**6. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு தேவையான ஆகக்குறைந்த ICTAD பதிவும் NCCASLஇன் உறுப்புரிமையும் உள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூல விண்ணப்பத்தினை சமர்ப்பித்து ஆவணத்தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.**

### அட்டவணை

| ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த ICTAD பதிவு (கட்டம்) |
|---|---|---|---|
| IFB#NEIAP-II/ALL/RE/01 | திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டியில் வதிவிடப்பொறியியலாளர் அலுவலகம் அமைத்தல். | 1,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |
| IFB#NEIAP-II/BUL/(R)/01 | திருகோணமலை மாவட்டத்தில் கல்லாறில் உத்தியோகத்தர் தங்குமிடமும், நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பங்களாவும் திருத்தம் செய்தல். | 1,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |
| IFB#NEIAP-II/ALL/JC/01 | மகாவலி வெள்ள அணைக்கட்டிலுள்ள காடுகளை துப்புரவு செய்தல் | 750.00 | M8(நீர்ப்பாசனம்) அல்லது அதற்கு மேல் |
| IFB#NEIAP-II/ALL/JC/02 | மாவலி ஆறு அணைக்கட்டிலும் அதன் அடைவீதியிலும் உள்ள காடுகளை துப்புரவு செய்தல். | 750.00 | M8(நீர்ப்பாசனம்) அல்லது அதற்கு மேல் |
| IFB#NEIAP-II/TRI/SL/01 | திருகோணமலை மாவட்டத்தில் மண் பரிசோதனை ஆய்வு கூடம் அமைத்தல் | 1,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |
| IFB#NEIAP-II/GIA/RE/01 | மன்னார் மாவட்டத்தில் முருங்கனில் வதிவிட பொறியியலாளர் அலுவலகம் அமைத்தல். | 1,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |
| IFB#NEIAP-II/BUL/(R)/01 | முருங்கனில் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் பங்களா திருத்தம் செய்தல். | 1,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |
| IFB#NEIAP-II/VAV/SL/01 | வவுனியா மாவட்டத்தில் மண்பரிசோதனை ஆய்வு கூடம் அமைத்தல். | 1,000.00 | M8 அல்லது அதற்கு மேல் |

**ப.இராமநாதன், திட்டப் பணிப்பாளர்,**
**வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்),**
**171, மின்சாரநிலைய வீதி,**
**திருகோணமலை.**

(சி-11356)

## இரு சகோதரர்கள் ராகமவில் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

ராகம பகுதியில் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வானில் வந்த ஆயுதம் தாங்கிய குழுவினரால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்த சகோதரர்கள் இருவரும் உந்துருளியிலும், ஈருருளியிலும் சென்று கொண்டிருந்த வேளை அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொலை செய்யப்பட்ட இருவரும் இதற்கு முன்னர் அப்பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றின் சந்தேக நபர்களென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## 3 முதல் 5 ஆண்டுகளுக்கு உதவ வேண்டும்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கு மூன்றுமுதல் ஐந்துஆண்டுகளுக்கு அமெரிக்க உதவி வழங்கப்படவேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மேற்கொள்ளப்படும் புனரமைப்புப்பணிகளைப்பார்வையிடுவதற்கு வருகை தந்த அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில் கிளிங்ரன் இந்தப் பரிந்துரையை அமெரிக்க அரசாங்கத்திடம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆசிய நாடுகளில் சுனாமி காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களில் இருந்து மீள்வதற்கு இந்த உதவி அவசியமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (32)

## மேன் முறையீட்டு நீதிமன்றை விரிவாக்க மசோதா

மத்தியில் நிறுவப்பட்டு இருக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினை மாகாண மட்டத்திற்கு விரிவுபடுத்த பாராளுமன்றத்தில் மசோ சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேன்முறையீட்டு ந மன்றின் ஆகக் குறைந்த நீதிபதிகளின் எண்ணிக்கை 6 முதல் 11 வரையும், ஆகக்கூடிய எண்ணிக்கை 11 முதல் 21 வரையும் மாற்றப்படுமென மசோதாவை சமர்ப்பித்து உரையாற்றிய நீதி அமைச்சர் கூறியுள்ளார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜீ.எல்.பீரிஸ்,ஐக்கிய தேசியக் கட்சி இம் மசோதாவை ஆதரிப்பதாகவும் ஆனால் சில திருத்தங்கள் செய்யப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டார். விரிவுபடுத்தப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் அதிகாரம் பிரதம நீதியரசருக்கல்லாமல் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் தலைவரிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்பது ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடெனத் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் மா அதிபருக்கெதிராக பொலிஸ் அதிகாரி வழக்கு!

(கொழும்பு)

எக்காரணங்களும் இல்லாமல் திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் உயரதிகாரி உபாலி ஹேவகேயை பதவியிலிருந்து நீக்கியதற்காக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவுக்குஎதிராக அவர் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தேர்தல் கண்காணிப்பு தமது பொறுப்பில் இருந்ததென்றும் இத்தேர்தலின் போது நடந்த சில மோசடிகள் சம்பந்தமாக அப்பொழுது மட்டக்களப்பு தேர்தல் பொறுப்பதிகாரியாக இருந்த தற்போதைய பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்னாண்டோவுக்கெதிராக தாம் சனாதிபதி ஆணைக்குழு முன்பாக சாட்சியளித்ததற்கு பழி வாங்கும் பொருட்டே இச் செயலை பொலிஸ்மா அதிபர் மேற்கொண்டுள்ளார். அவரின் இச் செயலுக்கு எதிராகவே தான் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

## தண்டி யாத்திரையைப் பின்பற்ற முடிவு

மகாத்மா காந்தி நடத்திய தண்டி யாத்திரையை காங்கிரஸ் கட்சி மீண்டும் நடத்த திட்டமிட்டிருக்கிறது. அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் யாத்திரைக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.குஜராத் மாநிலம் சபர்மதிஆச்சிரமத்திலிருந்து அடுத்த மாதம் 12 ஆம் திகதி யாத்திரை ஆரம்பமாகிறது.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று- கிளிநொச்சி

வ.இல:- 270/04,
தன்மை:- பணம்,
பெறுமதி- 7571.34/=

வழக்காளி.
கிளிநொச்சி கால்நடை வளர்ப்போர் கூ. சங்கம்.
அதன் தத்துவகாரர்,
திரு. தே. நீதிதேவன்.

எதிர்

1) சகாஜராசா சாந்தமலர்,
இல:– 151, விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.
2) ஜெ. செல்லம்மா,
இல:– 268,விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.
3) கே. சுலோஜனா,
இல:– 183, விவேகானந்தநகர்,
கிளிநொச்சி.

–எதிராளிகள்

### பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த எதிராளிக்கு,

மேற்படி வழக்கில், உங்களுக்கு எதிராக வழக்காளியின் தத்துவகாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், உங்களுக்கு, முறை நிறைவேற்றுனர் மூலம் அழைப்புக்கட்டளையைச் சேர்ப்பிக்க முயன்ற பொழுது நீங்கள் குறித்த முகவரியில் இல்லை என்ற முறை நிறைவேற்றுனரின் அறிக்கையைத் தொடர்ந்து இப்பகிரங்க அறிவித்தல் உங்களுக்கு எதிராக விடப்படுகின்றது. இப்பகிரங்க அறிவித்தல் வெளியாகி 15 நாட்களுக்கிடையில் நீங்களோ அல்லது உங்களது சார்பில் அக்கறையுடையவர்களோ மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒரு முக விளக்கம் நடாத்தி தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இதனால் வெளிப்படுத்தி இப்பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இந்த 2005 ஆம் ஆண்டு 02 ஆம் மாதம் 18 ஆம் திகதி
"மன்றின் கட்டளைப்படி"

வரைபு:-
தா.இ.குலசங்கர்,
வழக்காளி சட்டவாளர்,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.

செ.மாணிக்கராசா
பதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(சி 11351)

## பீகார் தேர்தல் முடிவுகளில் மோசடி!

### -மத்திய அமைச்சர் அச்சம்

பீகாரில் தேர்தல் வாக்குகள் எண்ணும்போது ராஷ்டிரிய ஜனதாதள வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் அதிகாரிகள் செயற்படக்கூடும், என்று மத்திய அமைச்சரும், லோக்ஜனசக்தி தலைவருமான ராம்விலாஸ் பஸ்வான் அச்சம் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாட்னாவில் பஸ்வான் நேற்று முன்தினம் தெரிவித்ததாவது, பீகார் சட்டசபைத்தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி 27ஆம் திகதி நடக்கிறது. வாக்கு எண்ணும் போது முறைகேடுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ராஷ்டிரீய ஜனதா தள வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் அதிகா ரிகள் செயற்பட்டு, முடிவுகளை மாற்றக்கூடும். பதவி உயர்வு உட்பட பல்வேறு சலுகைகள் வழங்குவதாக அவர்களுக்கு ஆசை காட்டியுள்ளனர்.

எதிர்க்கட்சி வேட்பாளர்கள் குறைந்த வாக்குகள் எண்ணிக்கையில் வெற்றிபெறும் இடங்களில் தேர்தல் அதிகாரிகள் அதில் முறைகேடுகள் செய்து ராஷ்டிரீய ஜனதாதள வேட்பாளருக்கு ஆதரவாக முடிவை அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாநில முதன்மை தேர்தல் அதிகாரி சகாவிடம் மனு தந்துள்ளேன். முறைகேடுகளைத் தடுக்க வாக்குகள் எண்ணப்படும் போது ஒவ்வொரு இடத்துக்கும் சிறப்புப பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளதாக பஸ்வான் கூறியுள்ளார்.

## கணுக்கேணிக்குளம், பனங்காமம்குளம் கமக்காரர்கட்கான

# அறிவித்தல்


முல்லைத்தீவு கச்சேரியில் 22-02.2005 நடந்த மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் கணுக்கேணிக்குளம் CAARP திட்டத்தின்கீழ் உடனடியாக புனரமைக்கப்பட உள்ளதாலும், பனங்காமம்குளம் NEIAP திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் மிகுதி வேலைகள் உடனடியாக முடிக்க வேண்டியுள்ளதாலும் பெரும்போக வேளாண்மை அறுவடை முடிந்தவுடன் துருசுகள் திறக்கப்பட்டு குளம் வெறுமையாக்கப்பட வேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்டது.

எனவே இவ்விரு நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழ் உள்ள கமக்காரர்கள் அனைவரும் இம்முறைசிறுபோகம் செய்யாது முறையே நீர்ப்பாசனப் பொறியியலாளர் முத்தையன்கட்டு, நீர்ப்பாசனப் பொறியியலாளர் வவுனிக்குளம், பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்படும் இவ்விரு வேலைகளையும் உரியமுறையில் நடைமுறைப்படுத்த உதவும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி. எஸ்.எஸ். சிவகுமார்,
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளரும்
பிரதி திட்டப்பணிப்பாளர், NEIAP
முல்லை மாவட்டம்.

(சி-11355)

## முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர்
## திரு த.குருகுலராசா அவர்கள் இடமாற்றம் பெற்றுள்ளார்
## அவர் தன் நற்சேவையை
# பாராட்டி நிற்கின்றோம்







★ நல்லதொரு கல்விமான்
★ அல்லும் பகலும் உழைப்பாளி
★ எல்லோரையும் அறிந்திடுவார்
★ பல்லோரும் புகழும் மனிதர்
★ சொல்லில் செயலில் வீரன்

★ சீரிய நல் நிர்வாகி
★ சிறந்த நல்ல உபகாரி
★ கூரிய அறிவாளன்
★ குறி தவறாத திட்டமிடல்
★ நேரிய மாமனிதன்.

இத்தனையும் வலயத்துக்கு சத்தான ஊட்டங்கள்
புத்தெழுச்சி கொண்டு பூமியில் நாம் வளர்வோம்
தனக்கென ஒரு கலாச்சாரம் அதனால் பெருமதிப்பு
நினைத்ததனைப்பற்றுவோம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

உத்தியோகஸ்தர்கள்,
பணியாளர்கள்,
வலயக்கல்விப்பணிமனை,
முல்லைத்தீவு.

(சி-11361)

## பாகிஸ்தான் அணியை தோற்கடிக்க கடுமையாக போராடவேண்டியிருக்கும்





'பாகிஸ்தான் அணியை தோற்கடிக்க கடுமையாக நாம் போராட வேண்டி இருக்கும்' என்று இந்திய அணித் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

நாக்பூரில் நடந்த துலீப் கோப்பை போட்டி முடிந்த பிறகு இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலி நிருபர்களிடம் கூறியதாவது :- பாகிஸ்தான் அணி சிறந்த தொன்றாகும். சொஹைப் அக்தர் இடம் பெறாததால் அந்த அணியை பலவீனமாக கருத முடியாது. பாகிஸ்தான் அணி இன்றும் சிறந்த அணியாகவே விளங்குகிறது. அந்த அணியில் நல்ல வீரர்கள் நிறைய பேர் உள்ளனர். பாகிஸ்தானுக்கு எதிராக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டித் தொடரில் வெற்றி பெற நமது அணி போராட வேண்டி இருக்கும்

சச்சின் டெண்டுல்கர் உடல் தகுதியுடன் இருப்பதாக ஐதராபாத்தில் ஏற்கனவே தெரிவித்து இருக்கிறார். எனவே அவர் உடல் தகுதி பற்றி கேள்வி எழுப்ப தேவை இல்லை. அவர் 100 சதவீத உடல் தகுதியுடன் உள்ளார்.

பயிற்சியாளராக தொடர்ந்து நீடிக்க விருப்பமில்லை என்று ஜோன்ரைட் கூறியிருப்பது அவரது தனிப்பட்ட விடயமாகும். இவ்வாறு கங்குலி கூறினார்.

## நியூசிலாந்துக்கு எதிரான இன்றைய போட்டி மெக்ராத்திற்கு ஓய்வு வழங்கியது அவுஸ்.




இன்று நடைபெறும் நியூசிலாந்துடனான மூன்றாவது ஒருநாள் போட்டியில் இருந்து அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான கிளன் மெக்ராத்துக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இவருக்குப்பதிலாக மைக்கல் கஸ்பரோவிச் அழைக்கப்பட்டுள்ளார். அத்துடன் தோள் மூட்டு காயங்காரணமாக சிகிச்சை பெறும் மத்தியு ஹெய்டனின் இடத்துக்கு சைமன் கடிச் நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக சகல துறை வீரர் மைக்கல் கிளார்க் களமிறங்குவார்.

ஒக்லாந்தில் நடைபெறும் இன்றைய போட்டியை நியூசிலாந்து வென்றால் மட்டுமே ஏனைய இரு போட்டிகளும் விறுவிறுப்பானதாக அமையும். ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் ஏற்கனவே அவுஸ்திரேலியா 2-0 என்ற ரீதியில் முன்னணி வகிக்கின்றது.

இரு போட்டிகளிலும் பிரகாசிக்கத்தவறிய நியூசிலாந்து வீரர் சின் கிளேயர் விலக்கப்பட்டு மைக்கல் பெப்ஸ், சகலதுறை வீரர் அன்ருஅடம்ஸ் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னைய போட்டிகளில் காயம் காரணமாக அடம்ஸ் விலகியிருந்தமையால் ஸ் கொட் ஸ்டைரிஸ் பங்கேற்றார். எனினும் மீண்டும் ஸ்டைரிஸ் காயப்பட்டுள்ளார்.

## சர்ச்சைக்குரிய சிம்பாப்வே வீரர்கள் மீண்டும் அணியில் இணையப் பேச்சு



கடந்த சில தினங்களுக்கு முன்பு சிம்பாப்வேயின் முன்னாள் வீரர் அன்டி பிளிக்னட் அணியில் இணைந்ததையடுத்து சர்ச்சைக்குள்ளான சிம்பாப்வே அணி வீரர்களான ஹீத்ஸ்ரீக், ஸ்ருவட் காலைல், ட்ரவர் கிறிப்பர் ஆகியோரும் அணியில் இணைய கிரிக் கெட் நிர்வாகத்துடன் நேற்று பேச்சு நடத்தியதாக அறிய வருகிறது.

பிளிக்னட் -பங்களாதேஷ் ஏ அணியுடனான நான்கு நாள் போட்டியில் பங்கேற்கும் சிம்பாப்வே ஏ அணியில் இடம் பிடித்துள்ளார். இதனையடுத்து இரு அணிகளும் நான்கு ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளன. இப்போட்டிகள் மார்ச் மூன்று முதல் 12 வரை நடைபெறும். எனினும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் தேசிய அணியில் பிளிக்னட் பங்கேற்க முடியாமல் போகும். இதற்கு அவர் ஏற்கெனவே காயத்தினால் அவதிப்படுவதாகும்.


இப்போட்டிகளின் பின்னர் சிம்பாப்வே வரும் செப்ரம்பர் மாதம் நியூசிலாந்து செல்லும் வரை எந்த ஒரு டெஸ்ட் போட்டியிலும் கலந்து கொள்ளாது.

## நிர்வாகத் தெரிவு

யாழ்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் நடப்பாண்டுக்கான தலைவராக டி.எம்.வேதாபரணம், செயலாளராக ப.முருகவேள்,பொருள்ாளர் இ.செல்வராசா உட்பட மற்றும் பத்து நிர்வாக்குழு உறுப்பினர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (41)




## விசுவமடு பாரதி வித்தியாலய இல்ல மெய்வன்மை போட்டி



பாடசாலை மட்டத்திலான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மைக் காலமாக சிறப்புற நடைபெற்று வருகின்றன. இதனடிப்படையில் விசுவமடு பாரதி வித்தியாலயத்தில் இப்போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது. கங்கை, ஜமுனை, காவேரி என மூன்றாக இல்லங்கள் பிரிக்கப்பட்டு அஞ்சல் ஓட்டங்கள், தடையோட்டங்கள், சிறுவர்களுக்கான போட்டிகள் என்பனவற்றுடன் தலையணைச் சண்டை, கயிறு இழுத்தல் போட்டி என்பனவும் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் ஸ்ரீசுப்பிரமணியீஸ்வரர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு நிகழ்வில் காவேரி இல்லம் 505 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், ஜமுனை இல்லம் 492 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், கங்கை இல்லம் 463 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும்



பெற்றன. அத்தோடு, போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ச)

## இரு போட்டிகளில் தொடர் தோல்வி

## இன்றைய போட்டியில் புதிய மாற்றம்

இரு போட்டிகளில் கிடைத்த படுதோல்வியை அடுத்து அணியில் மாற்றம் செய்துள்ளது நியூசிலாந்து கிரிக்கெட் நிர்வாகம்.

அவுஸ்திரேலியா,நியூசிலாந்து அணிகளுக்கு இடையே ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நடக்கிறது. இதுவரை நடந்த இரு போட்டிகளையும் அவுஸ்திரேலியா வென்று விட்டது. ஆகவே அணியில் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது நியூசிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் அடுத்த இரு போட்டிகளுக்கான 13 பேர் அணியை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. தொடக்க ஆட்டக்காரர் மேத்யூ சின்க்ளேர் நீக்கப்பட்டார். இவருக்குப் பதில் தொடக்க ஆட்டக்காரர் வாய்ப்புப்பெறுகிறார். மைக்கேல் பாப்ஸ், மிடில் ஆர்டர் துடுப்பாட்ட வீரராக அறிமுகமாகிறார். ஜேம்ஸ் மார்ஷல் இவர் ஹமீஸ் மார்ஷலின் சகோதரர். மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்று ஆக்லாந்து நகரில் நடக்கிறது.

அணி விபரம் :- ஸ்டீபன்பிளெமிங் (தலைவர்) நாதன்ஆஸ்லே, ஹமீஸ் மார்ஷல்,கிரெக் மெக்மிலன்,கிறிஸ் கெய்ர்ன்ஸ்,பிரெண்டன் மெக்கலம்,டேனியல் வெட்டோரி,ஜெப் வில்சன்,கைல் மில்ஸ்,டேரில் டபி,மைக்கேல் பாப்ஸ், ஆந்த்ரே ஆடம்ஸ் மற்றும் ஜேம்ஸ் மார்ஷல்.

## ஒளிபரப்பு உரிமைக்கு இடைக்கால தீர்வு போட்டியை தூர்தர்சனில் பார்க்கலாம்?

இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே மார்ச் 8 ஆம் திகதி தொடங்கும் கிரிக்கெட் போட்டியை ஒளிபரப்பும் உரிமை தூர்தர்ஷனுக்கு வழங்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தீர்ப்பு வழங்கியுள்ளது.

கிரிக்கெட் போட்டியை தொலைக்காட் சிக்காக தயாரிக்கும் உரிமையை இந்திய கிரிக்கெட் சபை விரும்பும் நிறுவனத்துக்குத் தரலாம் என்றும் உயர் நீதிமன்ற நீதிபதி கே.பி சிவசுப்பிரமணியம் வியாழக்கிழமை வழங்கிய தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.


கிரிக்கெட் போட்டி ஒளிபரப்பின் மூலம் வரக்கூடிய வருவாய் குறித்து சரியான கணக்கை கிரிக்கெட் சபை பரா மரிக்க வேண்டும் என்றும் நீதிபதி கூறி யுள்ளார்.

இந்தியாவில் நடக்கும் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான ஒப்பந்தத்தை ஜீ டி.வி நிறுவனம் பெற்றது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை கிரிக்கெட் சபை ரத்து செய்தது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜீ டி.வி நிறுவனம் ரிட் மனு தாக்கல் செய்தது. இவ்வழக்கில் வியாழக்கிழமை இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டது.



ஹைதராபாத்திலுள்ள விசாகா கிரிக்கெட் மைதானத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியைப் பார்வையிட வருகைதந்த முன்னாள் தலைவர் அஸாருதீனை கைலாகு கொடுத்து வரவேற்கும் இர்பான் பதான்.



அமெரிக்காவில் அரிசோனா மாகாணத்தின் மேரிவாலெவில் புதன்கிழமை நடைபெற்ற பயிற்சிக்கு இடையே ஒரே கையில் ஏழு பேஸ்போல்களையும் எடுத்து வைத்துக் கொண்டு சாகசம் புரியும் மார்கஸ் ஹேனல்.

## ஆரம்ப வீரராக கிளார்க்

இன்று நடைபெறும் நியூசிலாந்து அணியுடனான மூன்றாவது ஒருநாள் கிரிகெட் போட்டியில் தோள்பட்டையில் ஏற்பட்ட காயங்காரணமாக ஓய்வு பெறும் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மத்தியுஹெய்டனின் இடத்துக்கு அணியில் மேலும் ஒரு சிறப் பாட்டக்காரரான மைக்கல் கிளார்க் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இவர் இது வரை போட்டிகளில் ஏழாவது வீரராகவே களமிறங்குவார். கிளார்க் ஒரு நாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள சகல துறை வீரராவார். கடந்த வருட இறுதியில் நடைபெற்ற இந்தியாவுடனான ஒருநாள் போட்டியில் ஒன்பது ஓட்டங்களைக்கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை பெற்றதும் இந்தியாவுக்கெதிராக இவர் தனது கன்னி டெஸ்ட் (151) சதத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பாடசாலைக்கிடையிலான கோட்ட மட்ட உடற்பயிற்சி போட்டி

வட்டக்கச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற 2005ஆம் ஆண்டு வருடாந்த உடற்பயிற்சிப் போட்டியில் கரைச்சி கோட்ட பாடசாலைக்கிடையிலான A-9 வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள பாடசாலைகளுக்கிடையில் நடந்த உடற்பயிற்சிப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் என 13 அணிகள் பங்குபற்றின. இதில் முதலாம் இடத்தை இராமநாதபுரம் அ.த.க பாடசாலை (ஆண்கள்) அணியும் இராமநாதபுரம் மேற்கு பெண்கள் அணியும்.

இரண்டாம் இடத்தை (ஆண்கள்) பிரிவில் கிளி. மத்திய கல்லூரியும், பெண்கள் பிரிவில் இராமநாதபுரம் ம.வியும் பெற்றது மூன்றாம் இடத்தை கிளி மகாவித்தியாலயம் ஆண்கள் அணியும், கிளி. மத்திய கல்லூரி பெண்கள் அணியும் வெற்றியை தமதாக்கிக் கொண்டது. ஏ-9வீதிக்கு மேற்குப் புற மாகவுள்ள பாடசாலைகளுக் கிடையிலான போட்டி உருத்திரபுரம் ம.வி.யில் நடைபெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் முதல் இடத்தை உருத்திரபுரம் ம.வியும், பெண் கள் பிரிவில் அக்கராயன் ம.வியும்., இரண்டாம் இடத்தை ஆண்கள் பிரிவில் கிளி. இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் கனகபுரம் ம.வியும் மூன்றாம் இடத்தை பெண்கள் பிரிவில் உருத்திரபுரம் ம.வியும் ஆண்கள் பிரிவில் சிவநகர் ம.வியும் பெற்றுக் கொண்டன.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளுக்கான கோட்ட மட்டப் போட்டி இன்று கிளி. இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (12)

## 19 வயதுக்குட்பட்ட கரப்பந்தாட்டப் போட்டி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியன்

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.


மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும், மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளுமே ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்ற அடிப்படையில் மிகவும் விறுவிறுப்பாக விளையாடினார்கள்.

முதல் நான்கு செட்களையும் இரு அணிகளும் மாறி மாறி வெற்றி பெற்றமையால் தலா இரண்டு புள்ளிகள் என்ற அடிப்படையில் சமமாக இருந்தார்கள்.

ஐந்தாவது சுற்றில் இரு அணிகளும் விடாது முயற்சியுடன் விளையாடியபோதிலும் ஈற்றில் மகாஜனக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இரண்டாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை அளவெட்டி அருனோதயாக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (41)



**சிந்தனைக்கு**

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கியுள்ளேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சுனாமியிலிருந்து...!

சுனாமியின் தாக்கத்தில் ஏற்பட்ட அனர்த்தம் இதற்குரிய [illegible] புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடர்பான பேச்சுக்களை அரசாங்கம் முடிவிற்கு கொண்டுவர முற்பட்டுள்ளது போன்றதொரு நிலையையே அதன் அண்மைய நடவடிக்கைகள் வெளிப்படுத்துபவையாக உள்ளன. அதாவது அரசாங்கம் சுனாமியில இருந்து கவனத்தைத் திசை திருப்ப முற்பட்டுள்ளதாகவே எண்ண வைக்கின்றது.

போர் நிறுத்த மூன்றாண்டு முடிவில் அரசாங்கம் விடுத்த அறிக்கையில் இடைக்கால நிர்வாகசபை குறித்து விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு தயாராக இருப்பதாக விடுத்த அறிவிப்பானது தற்போதைய அரசியற் சூழ்நிலைக்கு ஒருவகையில் மாறுபாடான ஒன்றாகவே உள்ளது என்பது வெளிப்படையானது. அதாவது சுனாமித்தாக்கத்தின் பின்னர் தமிழர் தாயகம் சந்தித்த பேரனர்த்தத்தைத் தொடர்ந்து இதனால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப்பணிகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் தமது முழுக் கவனத்தைச் செலுத்தினர். இதற்கென சிறிலங்கா அரசாங்கத்துடன் பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியிலும் கவனம் செலுத் தினர்.

ஆரம்பத்தில் இவ்விடயத்தில் அரசாங்கமும் அக்கறை செலுத்துவது போன்று காட்டிக் கொண்டது இருதரப்பு சமாதான செயலகங்கள் ஊடாக இதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் இம் முயற்சிகளும் குறிப்பிட்டதொரு அளவிற்கு அப்பால் முன்னேற்றம் காண முடியாததொரு நிலையே காணப் பட்டது.

வேறு ஒரு விதத்தில் பார்ப்பதானால், சர்வதேச நாடுகளின் நிதியுதவிகள், நிவாரணம் தொடர்பான அறிவிப்புக்கள் என்பன உறுதி செய்யப்பட்டதன் பின்னர் அரசாங்கம் இவ்விடயத்தில் இருந்து விலகிக்கொண்டது அன்றி அக்கறைகாட்டாது விட்டது என்றே கொள்ளவேண்டியதாகவுள்ளது. இதனைத் தற்பொழுது இப்பொதுக்கட்டமைப்பு விடயம் குறித்து அரசாங்கம் பேசுவதை குறைத்துக்கொண்டுள்ளதில் இருந்தே புரிந்துகொள்ளமுடியும்.

இதற்கு மாறாகவே இடைக்கால நிர்வாகசபை குறித்த பேச்சை அரசாங்கம் கையில் எடுத்ததாகக்கொள்ள வேண்டியுள்ளது. இனப்பிரச்சினை இன்னும் தீர்ந்து போய்விடவில்லை; இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான தமது நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் இன்னமும் மாற்றிக் கொள்ளவில்லை என்பன புலிகளால் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டு விட்டதொன்று. இதேசமயம் சுனாமி அனர்த்தம் பேரனர்த்தமாக அமைந்ததினால் அரசியல் விவகாரங்கள் உள்ளிட்ட விவகாரங்களை ஓரம் தள்ளிவிட்டு சுனாமி அனர்த்தத்தில் இருந்து மக்களை மீட்டு எடுத்தல் தொடர்பான விடயத்தில் புலிகள் தீவிர அக்கறையை வெளிப்படுத்தினர். இதன் ஓர் அங்கமாகவே பொதுக் கட்டமைப்புக் குறித்த விவகாரம் முதன்மை பெற்றது.

ஆகையால் சுனாமிப் பேரனர்த்தத்தை அடுத்து கிடைக்கப் பெற்ற நிவாரண உதவிகளை எவ்வாறு பங்கீடு செய்வது – பாதிக் கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணப்பங்கீட்டை சம அளவில் எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பது குறித்த விவகாரமே அரசியலில் முதன்மை பெற்றவிவகாரமாக இருந்தது. இலங்கைக்கு உதவி வழங்கிய நாடுகளும், நிதியுதவி செய்த நிறுவனங்களும் இது குறித்து ஆவல் கொண்டுமிருந்தன.

ஆனால் அரசாங்கமோ இவ்விவகாரத்தின் முக்கியத்துவத் தையும், அவசியத்தையும் புறம் தள்ளிவிடுவது போன்று இடைக் கால நிர்வாகம் குறித்துப் பேச அரசாங்கம் தயார் எனக் குறிப்பிட் டுள்ளது. இதன்மூலம் சுனாமி அனர்த்தம் தொடர்பான நிவாரணப்பணிகளுக்கான பொதுக் கட்டமைப்புக் குறித்துப் பேசுவதை அரசு பிற்போட முற்பட்டுள்ளது என்பதே வெளிப்படை.

புதிதாக அரசாங்கம் ஏதே ஒரு அரசியல் நிலைப்பாட்டை எடுத்துள்ளது போன்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான முயற்சியில் முன்னேற்றகரமான நடவடிக்கை போன்றதொரு தோற்றப்பாட்டுடன் அரசாங்கம் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருப்பினும், இதில் புதிதாக எதுவுமே இல்லை. கடந்த காலத்தில் கூறியவற்றையே அரசாங்கம் திருப்பிக் கூறியுள்ளது என்பதே நிதர்சனமாகும்.

அரசாங்கம் இவ்விவகாரங்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகளே இவற்றை வெளிப்படுத்தப்போதுமானதாகும். யுத்தநறுத்த மூன்றாண்டு நிறைவையொட்டி தகவல் திணைக்களம வெளியிட்ட அறிக்கையில் தன்னாட்சி அதிகாரசபை குறித்து தாம் எதுவும் குறிப்பிடவில்லை எனத் தகவல் திணைக்களப பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் மற்றொரு அறிக்கையில் இடைக்கால நிர்வாகப் பேச்சுடன் இறுதித்தீர்வு பற்றிய பேச்சும் இடம்பெற வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் அரசாங்கம் விடுத்த முதலாவது அறிக்கையையும் அதன் பின்னான திருத்தங்களும் அரசாங்கம் சுனாமி விவகாரத் தில் இருந்து கவனத்தை இனப்பிரச்சினை விவகாரத்திற்குத் திசை திருப்பிவிடும் நோக்கம் கொண்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாய உள்ளது. அதாவது சுனாமியை மறப்பதென்பது தமிழ் மக்களுக்கான நிவாரண உதவிகளை மறுத்தல்,மறைத்தல் என்பதாகும். அரசாங்கத்தின் தற்போதைய முயற்சி இதன் அடிப்படையிலானதே.

## புலிகள் சிறுவர்களை படையில் இணைப்பதான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை

### -கிளிநொச்சிமாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்

யுத்தத்தினால் பெரிதும் பாதிக் கப்பட்ட வன்னிப்பிரதேசத்தில் சிறுவர்களின் நலன்கள் மிகவும் சிறப்பாக பேணப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் யுனிசெப் அமைப்பு விடுத்த அறிக்கை மாணவர்களாகிய எம்மை மிகவும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பு சிறுவர்களை படையில் இணைத்துக்கொள்கின்றது என்ற செய்தியானது உண்மைக்குப் புறம்பானதும் சோடிக்கப்பட்டதும் அரசியல் லாபம் கருதிச்செயற்படுவர்களின் பொய்யான தகவல்களை அடிப்படையாகக் கொண்டதும் உண்மைகளை முடிமறைக்கும் வகையில் ஒரு பக்கச்சார்பாக வெளியிடப்பட்டதாகவே எம்மால் உணரமுடிகின்றது. இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்துக்கு சிறுவர் நலன் தொடர்பாக அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாகவது ;

போரின் வடுக்களையும் துன்ப துயரங்களையும் சுமந்து கல்வியை மூலதனமாகக்கொண்டு அயராது கற்கும் எமது மாணவர்களுக்கு ஏற்படும் தடங்களையும் இடையூறுகளையும் நீக்கி எமது கல்வி முன்னேற்றத்திற்காக அயராது உழைக்கும் விடுலைப் புலிகள் அமைப்பானது பெற்றோர்களை இழந்த சிறுவர்களின் ஒளிமயமான எதிர் காலத்திற்காக பராமரிப்பு நிலையங்களையும் நிறுவி ஏனைய வறிய மாணவர்களுக்கான கல்வித்தேவைகளை வழங்கியும் வருகின்றார்கள் என்ற உண்மை மறைக் கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பொருளாதார நெருக்கடிகளாலும், குடும்பவறுமை காரணமாகவும், விரக்கதி காரண்மாகவும் சிறுவர்கள் விடுலைப்புலிகள் அமைப்பில் இணைய முன்வரும் போதெல்லாம் அவர்கள் சிறுவர் தொடர்பான உரிமைகளை மதித்து அவர்களின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு 'யுனிசெப் ஊடாக பல சிறுவர்களை மீள ஒப்படைத்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்நிலையில் தாங்கள் நேரடியாக வருகைதந்து இங்குள்ள உண்மை நிலையினை கண்டறிய வேண்டும் என்பதனையே தமிழ் மாணவர்களாகிய நாம் விரும்புகின்றோம். இலங்கையில் எந்தவொரு பகுதியிலும் இல்லாதவாறு வடக்கு,கிழக்கு பகுதிகளிலேயே விடுதலைப் புலிகள் சிறுவர்களின் உரிமைகள் உயர்நிலையில் வைத்துமதிக் கப்படுகின்றது. போரின் தாக்கத்தினால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்காக பல்வேறு சிறுவா நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற வேளையில் அண்மையில் யுனிசெப் வெளியிட்ட அறிக்கை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே தாங்கள் ஒரு தடவை நேரில் வருகை தந்து உண்மை நிலையினை வெளிப்படுத்த வேண்டும் எனக்கோருகின்றோம். தாங்கள் வன்னிச்சிறுவர்களின் மேல் அக்கறை கொண்டவர் என்று நம்பும் நிலையில் நேரடியாக வருகைதந்து எமது நிலைப்பாட்டையும, விடுதலைப்புலிகள் அமைப்பு சிறுவர் நலனில் தொடர்பில் கொண்டுள்ள உயர் நிலை தன்மையில் கண்டறியவேண்டும். எனத் தமிழ் மாணவர்கள் சார்பில் தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

## எம்பிலிப்பிட்டிய நீதிமன்றில் தப்பியோடிய இருவர் கைது

எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் குண்டுவெடித்தபோது தப்பிச்சென்ற கைதிகளில் இரண்டு விளக்கமறியல் கைதிகள் நேற்று முன்தினமிரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தின்போது 29 விளக்கமறியல் கைதிகள் தப்பிச்சென்றனர். இவர்களில் இதுவரை 13பேர் கைது செய்யப்பட்டும் சரணடைந்தும் உள்ளனர். தப்பிச்சென்று தலைமறவாகியிருக்கும் விளக்கமறியல் கைதிகளை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா தெரிவித்தார்.

## மீள் நிர்மாணப் பணிகளுக்கு உலக வங்கி 75 மில்.டொலர் உதவி

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள நிர்மாணப்பணிகளுக்காக 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிக நிதியுதவியாக வழங்குவதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது. இந்தத்தீர்மானத்தை உலக வங்கி நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்கனவே 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை இம்மாதம் உலகவங்கி வழங்கியிருந்தது. தற்போது வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தொகையில 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாகவும், மிகுதி 45 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகவும் வழங்க தீர்மானித்துள்ளதாக உலகவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்த நிதியுதவியானது பாதிக்கப்பட்ட மக்களுக் கான வீடமைப்பு,வேலைவாய்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்காகவே வழங்கப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை எனச் சர்வதேச அமைப்புகள் மதிப்பீடு செய்துள்ளன. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீட்டர் ஹரல்ட், இந்த நிதி ஒதுக்கீடுகளில் உலக வங்கி நெகிழ்வுப்போக்கைக் கடைப்பிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ ஆசிய அ.வ.70 லட்சம் டொலர் உதவி

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 70 லட்சம் டொலர் நிதி உதவியினை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் கட்டுமானபணிகளுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.இந்த நிதியுதவி மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் தமது இயல்பு வாழ்கைக்குத் திரும்ப முடியும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (32)

## எழுது மட்டுவாள் பிரதேசத்தில் படையினர் இரவிரவாகப் பயிற்சி

### -வெடியோசையால் மக்கள் பீதி

எழுது மட்டுவாள் பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை சிறிலங்காப்படையினர் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டதால் இப்பிரதேசம் எங்கும் வெடியோசைகளும, குண்டுச்சத்தங்களும கேட்டவண்ணமாக இருந்தது. இதனால் அருகில் உள்ள பொது மக்கள் நித்திரையை இழந்ததுடன் பெரும் பீதியடைந்தும் உள்ளனர். பயிற்சி நடவடிக்கையின் போது படையினரால் பராலைட் வெளிச்சங்கள் இடையிடையே விடப்பட்டதாகவும் கடந்த சிலகாலமாக அமைதியாக இருந்த இப்பகுதிகள் இப்பொழுது படையினரின் பயிற்சி நடவடிக்கையால் பதட்டம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (28)

## 20 இலங்கைத் தமிழ் அகதிகள் படகுகள் மூலம் தாயகம் திரும்பினர்

தமிழ்நாட்டிலிருந்து மேலும் 20 ஈழத்தமிழ் அகதிகள் கடல் வழியாக நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

மன்னார் கடற்கரையை படகு மூலம் வந்தடைந்த இவர்கள் தலைமன்னார் பொலிசாரினால் அழைத்துச்செல்லப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். நேற்று நீதிமன்ற உத்தரவின் பேரில் சொந்த இடங்களுக்கு இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

**– அம்பாறை ஆலையடி வேம்புப் பகுதியில் –**

# கிராம சேவகரால் பதுக்கப்பட்டிருந்த நிவாரணப் பொருட்கள் மக்களால் மீட்பு

பொதுமக்களுக்கு வழங்குவதற்காக கிராம சேவகரிடம் வழங்கப்பட்ட பொருட்களை கிராம சேவகர் அபகரித்து பதுக்கிவைத்திருந்தார். நேற்றுக்காலை 9.30 மணியளவில் அப்பொருட்களை பொது மக்கள் கைப்பற்றியதுடன் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது; அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பனங்காட்டுக் கிராமசேவகர் பிரிவில் மக்களுக்கு வழங்குவதற்காகவென பல நிறுவனங்களால் கிராம சேவகரிடம் ஒரு தொகை நிவாரணப் பொருட்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்டிருந்தன. அப்பொருட்களை அபகரிக்கும் நோக்கில் கிராம சேவகர் தனியான ஓர் இடத்தில் பதுக்கி வைத்துள்ளார். இதனையறிந்த பொதுமக்கள் அப்பொருட்களைக் கைப்பற்றியதுடன் அவற்றைப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் காட்சிப்படுத்தி நீதி கோரி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.



## -விசுவமடு புத்தடிப்பகுதியில்-

# பெண்ணின் மரணம் தற்கொலை எனத்தீர்ப்பு சந்தேகத்தின் பேரில் கைதான கணவன் விடுதலை

(விசுவமடு)

விசுவமடு புத்தடிப்பகுதியில் கடந்த 19 ஆம் திகதி சுருக்கிட்ட நிலையில் இறந்து காணப்பட்ட பெண்ணின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அப்பெண்ணின் கணவன் நீதிமன்ற விசாரணையில் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார். விசுவமடு புத்தடிப் பகுதியில் கடந்த 19 ஆம் திகதி ரதீஸ்குமார் சந்திரரேகா (வயது-21) என்ற பெண் தனது வீட்டு வளைத் தடியில் கழுத்தில் சுருக்கிடப்பட்ட நிலையில் இறந்து காணப்பட்டமை தெரிந்ததே.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, இது தொடர்பாக விசுவமடு காவல் பணிமனையினர் சந்தேகத்தின் பெயரில் இறந்தவரின் கணவரான மகேந்திரன் ரதீஸ்குமார் (வயது-29) என்பவரை கைது செய்து விசாரணையின் பின் கடந்த செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு நீதிமன்றில் நீதியாளர் முன்னிலையில் முற்படுத்தினர். நீதியாளர் விசாரணையில் மரண விசாரணை அதிகாரியின் அறிக்கைப்படி மரணமடைந்த ரதீஸ்குமார் சந்திரரேகா என்பவர் தனது கழுத்தில் தானே சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்ற விசாரணை அறிக்கைப்படி நீதியாளர் விசாரணையை மேற்கொண்டு இறந்த இளம் பெண்ணான சந்திரரேகா என்பவர் தனது கழுத்தில் தானே சுருக்கிட்டு தூங்கித் தற்கொலை செய்து கொண்டார் எனத் தீர்ப்பளித்து இறந்தவரின் கணவரான மகேந்திரம் ரதீஸ்குமார் எனபவரை விடுதலை செய்துள்ளார். (46)

## கலந்துரையாடல்

துணுக்காய் பிரதேசத்தின் உந்துருளி ஓட்டுநருக்கான கலந்துரையடல் நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளதால் அனைத்து உந்துருளி ஓட்டுநர்களையும் சமூகம் அளிக்குமாறு துணுக்காய் காவல் பணிமனையினர் கேட்டுள்ளனர். (24)

# கடல்வளப்பாதுகாப்பு தொடர்பில் மன்னாரில் இன்றுகலந்துரையாடல்

மன்னார் அரசியல்துறையினிரின் ஏற்பாட்டில் கடல் வளம் பாதுகாத்தலும் எதிர்கால நடவடிக்கையும் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணியளவில் விடத்தல்தீவு அ.த.க பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

இதில் பொது அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் மதஞ்சார்பான அமைப்புக்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி கலந்துரையாடலில் கடலிலுள்ளவளங்களைப் பாதுகாத்தல், டைனமற் பாவிப்பதனால் ஏற்படும் அழிவுகள், பாதிப்புக்கள் என்பன பற்றி எடுத்துக்கூறி அவற்றிலிருந்து எவ்வாறு கடல் வளங்களைப் பாதுகாத்தல் போன்றவை பற்றியும் எதிர்கால நடவடிக்கை என்ன என்பதையும் நோக்காகக் கொண்டு மேற்படி கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது. (தீ)

# திருமலை திரியாய் கிராமத்தில் யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(திருகோணமலை)

திரியாய்க் கிராமத்தில் இரண்டுபிள்ளைகளின் தந்தையான சபாரத்தினம் சுதாகரன் (வயது-30) கடந்த வியாழன் அதிகாலை 3 மணியளவில் யானை தாக்கி மரணமானார்.

திரியாய்க்கிராமத்தில் வைத்தியசாலை இல்லாததன் காரணமாக காயமடைந்த சுதாகரனை உழவு இயந்திரம் ஒன்றில் ஏற்றி குச்சவெளிக்கு கொண்டுவரும் போது மரணமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரின் சடலம் திருமலை மருத்தவ மனை சவச்சாலையில் ஒப்படைக்கப் பட்டது.

சமார் 1500 குடும்பங்கள் வாழ்ந்த கிராமம் திரியாய் 1982 வன்செயலில் முழுக்குடும்பங்களும் வன்னிக்கும் வேறு பிரதேசங்களுக்கும் இடம் பெயர்ந்தன. யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் வன்னியிலிருந்து திரும்பிய குடும்பங்களில் ஒன்று முத்து என்றழைக்கப்படும் சுதாகரனின் குடும்பமாகும்.

" சாவியாறு வயல் பகுதியில் சுதாகரன் ஆறு ஏக்கர் காணியில் மாரிப் போக நெற்நெயற்கை செய்திருந்தார். சுமார் ஐந்து ஏக்கர் நெற்பயிர் கருகி விட்டது. ஒரு ஏக்கர் நெற்பயிரே தப்பியிருந்தது. அதனை அறுவடை செய்து சூடு வைத்திருந்தார். கடந்த வியாழன் பகல் சூடு மிதிக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. புதன் இரவு சூட்டுக்காவல் செய்து கொண்டிருந்த போது காட்டு யானை சூட்டுக்களத்தில் பிரவேசித்து சூட்டை நாசம் செய்ததுடன் சூட்டைக் காவல் செய்த சுதாகரனையும் அவருடன்இருந்த இன்னொருவரையும் துரத்தியது. மற்றநபர் தப்பிவிட்டார் சுதாகரன் யானையிடம் மாட்டிக் கொண்டார்" என மரணவிசாரணையில் சாட்சியமளிக்க வந்திருந்த அவரின் இளம் மனைவி ஜெயந்தினி தெரிவித்தார். (25)

# அழிவுற்ற பாடசாலைகளை நிர்மாணிக்க சர்வதேச அமைப்புக்களுடன் ஒப்பந்தம்

(திருகோணமலை)

கடற்கோளினால் அழிக்கப்பட்ட பாடசாலைகளில் 14 பாடசாலைகளை புதிதாக நிர்மாணித்துக் கொடுப்பது தொடர்பான உடன்படிக்கையை எடுயுகேஷன் இன்ரநெஷனல் என்ற சர்வதேச கல்வி அமைப்பும்,நெதர்லாந்து ஒக்ஸ்பாம் அமைப்பும், கடந்த வியாழக் கிழமை மத்திய கல்வி அமைச்சுடன் கைச்சாத்திட்டன. இப் பதினான்கு பாடசாலைகளில் 9 வடக்கு கிழக்கில் உள்ளன. 467 மில்லியன் ரூபா செலவில் இப்பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்படும். எஞ்சிய 05 பாடசாலைகளும் தெற்கில் உள்ளன. வடக்கு கிழக்கில் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ள பாடசாலைகளும் அவற்றுக்குரிய மதிப்பீட்டுத் தொகையும் வருமாறு திருகோணமலை மாவட்டம்:-நிலாவெளி தமிழ் ம.வி 70 மில்லியன் ரூபா, குச்சவெளி அல்லூரியா-44 மில்லியன் ரூபா, சீனன்வெளி ஆதவன் வி-42 மில்லியன், உப்பூறல் சிவசக்திவித்-37 மில்லியன் அம்பாறை மாவட்டம்:-ஒலுவில் அல்ஜெய வித்-58 மில்லியன், மட்டக்களப்பு மாவட்டம்:-செட்டிப்பாளையம் ம.வி:-74 மில்லியன், குருக்கள் மடம் கலைவாணி ம.வி-82 மில்லியன், முல்லைத்தீவு மாவட்டம்:-முல்லைத்தீவு இந்து தமிழ் வித்-30 மில்லியன், முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலை-30 மில்லியன் ரூபா. (25)

## இல....

குச் சந்தையில் நேற்று 0.2 வீதவீழ்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஆர். யோகராஜன் கருத்துக்கூறுகையில் அமைச்சர் பதவி விலகல் ஏற்றாலும், ஏற்கப்படாவிட்டாலும் பதவி விலக முடிவு செய்யப்பட்டதில் மாற்றமில்லை என்றார்.

இது தொடர்பாக தமது கட்சியினருடன் பேச சனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டாலும் அவை உறுதியானவையாக இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தினை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமையினாலேயே தாம் இம்முடிவுக்கு வரக்காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு உறுதி வழங்கப்பட்ட அமைச்சுப்பதவி வழங்காமையால் அரசாங்கத்திற்கும் இ.தொ.கா விற்குமிடையில் இழுபறி நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## விடுதலை....

பெற்றோர்களிடம் கையளிக்கும் பொருட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் வைத்து செயலக பிரதிநிதி அர்ச்சுனிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## துணை...

பிரஸ்கரும் கலந்து கொண்டார். சிறிலங்கா அரசாங்கத் தரப்பில் சிறிலங்கா சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவும் கலந்து கொண்டார்.

## வீரவணக்கம்

சாவடைந்தவராவார்.இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் 'வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

## அவசர....

இதேவேளை இளவரசர் சாள்சின் மட்டக்களப்பு விஜயம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கும், பிரிட்டிஷ் தூதுவராலயத்திற்குமிடையே இழுபறி நிலை காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியாவிற்கு பயணம் செய்யும் வழியில் இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தங்களை பார்வையிடவுள்ள இளவரசர் சாள்ஸ் சிறிலங்கா சனாதிபதியை சந்தித்து பேசவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சுனாமியால்....

இதனைத்தொடர்ந்து மேலும் இவர்கள் சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட வாகரைப் பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளுக்குச் சென்று அங்கு கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களைச் சந்தித்து சிறார்கள் தொடர்பாகவும், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், கல்வி கற்பிப்பதில் உள்ள அசௌகரியங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர். இதனையடுத்து பட்டிருப்பு வலய முன்பள்ளிகளுக்கும் குறிப்பாக கல்குடாவிலுள்ள முஸ்லிம் முன்பள்ளிகளுக்கும் சென்று நிலைமைகளைக் கேட்டறிந்து அங்குள்ள சிறார்களுக்கும் சிறுவர் நல உள்ளீடுகளை வழங்கினர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும் தனது பணிகளை பலவழிகளிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒருங்கிணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


# கண்ணீர் அஞ்சலி

**நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு**



**23.02.2005**

அன்று இயற்கை எய்திய அன்பு நண்பர் நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
கிளிநொச்சி மாவட்டம்.

(5749)



# கண்ணீர் அஞ்சலி

**நாட்டுப்பற்றாளர் திரு. வே.க. ஏரம்பு**

**அவர்கள்**



இறையடி 23. 02. 2005

காலம் எங்களுக்குத்தந்த அன்புத் தாத்தா
எங்கள் கண்ணீர் மல்கிய இதய அஞ்சலி
என்றும் உங்கள் நினைவில்
அறிவுச் சோலை சிறுவர் இல்லம்.

பிள்ளைகள்,
காந்தரூபன் அறிவுச்சோலை
சிறுவர் இல்லம்.

(5487)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது